# ஸ்ரீ குமரகுருபரர்



116
17.6.83

ஆனி 1 (15—6—83)
தொகுதி 5 பகுதி 9

உ

சிவ சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

கயிலைமாமுனிவர்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய — இலக்கியத் திங்கள் இதழ்.


சிறப்பாசிரியர்.

பேராசிரியர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு மு. அருணசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார். அண்ணாமலை நகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T,

காஞ்சிபுரம்

புலவர் திரு கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D.,

மதுரை

திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு. பொ. முத்தரசு M A., ஸ்ரீவைகுண்டம்


அட்டையில் :

திருஞானசம்பந்தர்

திருவுருவம்



பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.

L8666

# அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 ஆவது அதிபர்
'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

'சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்னும் ஐம்புலன்களின் ஆதிக்கத்தை யாருமே அடக்கியதில்லை' இப்படி ஒரு தொடரைச் சொன்னால் அது பிழையாகும். ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அவர்கள் அத்தொடர் சரிதான் என்கிறார்.

நாக்கு உள்ளவர்கள் சுவைப்புலனை அடக்கமுடியாது; கண் உள்ளவர்கள் காட்சிப் (ஒளிப்) புலனை அடக்கமுடியாது; காது உள்ளவர்கள் - கேட்கும் திறம் பெற்றவர்கள் ஓசைப் புலனை அடக்கமுடியாது; மூக்கு உள்ளவர்கள் முகர்வு உணர்வை அடக்கமுடியாது; மொத்தத்தில் சரீரம் உள்ளவர்கள் ஊறு என்னும் தொடு உணர்வுப் புலனை அடக்கமுடியாது!

— இத்துணையும் சாமானியர் நிலைதான்; யோகி களுக்குத் - தவசிகளுக்கு இதுவே பொருந்தா - என்று யாவரும் கருதுகின்றனர்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் யோகிகள் - தவசிகள் ஆகியோரும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம் என்ப வற்றை அடக்கவில்லை என்கிறார். நமக்கு அச்செய்தி வியப் பாகவும் - ஏன்? அதிர்ச்சியாகவும்கூட இருக்கிறது.

ஆனால் அவர்தம் அருள் வாக்கைக் கேட்ட பிறகு, நாம் சொல்லும் புலன்களை ஸ்ரீசுவாமிகள் குறிப்பிடவில்லை என்பது புலனாகிறது.

புறத்துப் பொறிகளால் தூண்டப் பெறும் புலன்களை அடக்கிய பெரியவர்கள் உள்ளத்துப் புலன்களை அடக்க வில்லை என்கிறார்.

"உள்ளத்திலும் புலன்கள் ஐந்தும் உண்டோ?

அவை அடக்க வேண்டியவையா; அடக்க வேண்டா தவையா?" — என்ற நம் ஐயங்களுக்கு விடை சொல்வது தான் புண்டார மும்மணிக் கோவையின் இருபத்தாறும் பாடலாகிய ஆசிரியப்பா.

"சாமானியர் யாருக்கும் எப்போதும் எந்த விதத்திலும் அடங்காத புலன் உணர்வுகளை அடக்கிய தவயோகம் வாய்க்கப் பெற்றவர்கள் உள்ளத்தில் ஒடுங்காத ஐம் புலன் கள் உள்ளன. இது ஆச்சரியமான செய்தி" என்று பாடலைத் தொடங்குகிறார்.

"அடங்கா ஐம்புலன் அடக்கினர்க்கு அம்ம
ஒடுக்கா ஐம்புலன் உளத்தினும் உளவே"

[அடக்கினர் - அடக்கிய தவயோகிகள்; அம்ம - வியப்பு இடைச் சொல்]
என்பது அப்பாடலின் தொடக்கம்.

இனி அவர் சொல்லவிருக்கும் உள்ளத்து ஐம்புலச் செய்திகள் அதிரகசியமானவை. அத்துய்ப்புக்களே தவ யோக இம்மைப் பலன்கள். இம்மைப் பேரின்பம் என்று அவற்றைச் சொல்வதுண்டு. ஸ்ரீசுவாமிகள் அவர்களே அவற்றை, 'ஆரா இன்பம்' என்றும், 'பேரா இன்பம் இப் பெற்றி'' என்றும் குறித்தருளுகிறார்கள்.

இவையும் ஞானப் பெரும் பயணத்தின் படிநிலைகளே யன்றி முடிநிலைகளல்ல.

மாம்பழம் உண்டவனை எப்படி இருந்தது என்று கேட்டால் இனிப்பாய் இருந்தது என்கிறான். பலாச்சுளை உண்டவனைக் கேட்டாலும் அதே பதில்தான் வருகிறது. இரண்டும் ஒன்றா? ஒன்றன்று; என்றாலும் அந்த ருசி பேதத்தை அநுபவம் ஒன்றாலேயே அறியமுடியும். இப் படித்து என்று வார்த்தைகளால் புலப்படுத்த முடியாது.

புறப் பொறி வழிப்பட்ட புலன்களின் நிலையே இவ்வா றென்றால் உள்ளப் புலன்களின் சுவைகளின் பட்டியலைச் சொல்லலாமேயொழிய விவரிக்க இயலாது. ஞானநுபவம் பெற்றவர் மட்டிலுமே துய்ப்பவற்றை விவரிக்கவும் வேண்டாம் என்பது நம் எண்ணம்.

புறக்காதுக்குக் கேட்காது; ஆனால் மனத்துள் மட்டும் அமைதியாக இதமாக - சுகமாக - ஆழப்படுத்துவதாக ஓர் ஒலி கேட்கும்.

''செவிப்புலன் அறியா அகத்தொலி ஒன்றே''

என்று அதனை ஸ்ரீசுவாமிகள் குறிப்பிடுகிறார்கள். ஓசை என்பது புறப்புலன்; அது பொருளற்றது. ஒலி - தொனி - பொருளுடையது.

புறச் சரீரம் உணராது; அகம் மட்டும் மிகக் குளிராக் குளிர்ச்சியை உணரும். மார்கழிமாத விடியலின் தடாகக்

குளிர்ச்சியை ஒப்ப, அது குளிர்ச்சி என்பதே உணர இயலாதது. அதனைத் தட்பம் என்பர்.

'மெய்ப்புலன் அறியாத் தட்பம்மற்று ஒன்றே'

என்கிறார் ஸ்ரீசுவாமிகள்.

புறக்கண்ணுக்குத் தெரியாது; உளக்கண் மட்டும் அதிரூப சௌந்தர்யம் பிலிற்றும் ஒளிச் சிதறல்களைக் காலும் பிரகாசம் ஒன்றினை உன்னிப்பாகக் கண்டுகொண்டிருக்கும்.

'கண்புலன் அறியாக் கதிர்ஒளி ஒன்றே'

என்று அதனை ஸ்ரீசுவாமிகள் அறிவுறுத்துகிறார்கள்.

புறநாக்குக்குத் தெரியாது; உளநாக்கு மட்டும் ஓர் இனிப்பைத்-திகட்டாத, மணத்துடன் கூடிய திறத்துடன் பொலிந்த-இன்னது எனக் கூற ஒண்ணாத ஒரு பொருளின் இனிப்பைச் சுவைத்துக் கொண்டேயிருக்கும்.

'நாச்சுவை அறியா நறும்சுவை ஒன்றே'

என்று அதனைக் குறிப்பிடும்போது இதுநாள் வரை அத்தகு இனிப்பை எந்த நாக்கும் சுவைத்திருக்க முடியாது என்ற பொருளும் தொனிக்கிறது.

உள மூக்கு மட்டும் ஒருமணத்தை - உலகியல்பு கடந்த ஒரு மணத்தை முகர்கிறது. இதனை

'மூக்கு உயிர்த்து அறியா முருகுமற்; றொன்றே'

என்கிறார். சாதரணமாக அழகைத்தான் 'முருகு' என்பார்கள். சுவாமிகள் நறுமணத்தை அச்சொல்லால் குறிப்பிடுவதிலும் ஒரு சூட்சமம் இருக்கிறது. சாஸ்திர ஞானம் வேறு; மெய்ஞ்ஞான அநுபவம் வேறு.

—சிவசிவ

# சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்*

அ. ச. ஞானசம்பந்தன்.

தடமுலை ஆர்ந்தனன், ஆர்ந்தனன்—— ஆமாத்தூர் ஐயன் அருள் அது. "சங்கிலித்தடமுலை ஆர்ந்தனன்" என்றால் ஏன் தெரியுமா? I was permitted to do so. ஆமாத்தூர் ஐயன் அருள் அது. சங்கிலியிடத்தில் நீஇல்லறம் நடத்துக என்று திருவருள் புரிந்தான். அதனால் அப்படி இருந்தார். கர்த்தத்துவம் தன்னிடத்திலே இல்லையென்று உணர்ந்தபோது ஒரு பெரிய பாரம் நீங்குகிறது. பிள்ளை அம்மாவின் முந்தானியைப் பிடித்துக்கொண்டு ஜம், ஜம் மென்று நடக்கும. ஏன்? வேறொரு இடத்தில் கண்ட்ரோல் இருக்கிறது என்பதாலே. அந்தப் பிடி தளரும்போது நடுங்கு குகிறது. அதுபோலத் தன்னுடைய வாழ்க்கையின் பிடி மானம் வேறொரு இடத்தில் இருக்கிறது என்றபோது, எதையும் அநுபவிக்க இவர் தயங்கியது கிடையாது. அநு பவித்தாயா? ஆம், ஆமாத்தூர் ஐயன் அருள் அது. ஒரு கல்யாணம் பண்ணிக்கொண்டு, இன்னொரு கல்யாணம் பண்ணிக்கொள்ள மனம் ஓடிற்று? அதுவும் ஐயன் அருள் இந்தமாதிரி இக்கட்டான நிலைமையில் இறைவனுடைய

*இக்கட்டுரைத் தொடர் 12 ஆண்டுகளுக்கு முன்னர் தஞ்சை மாவட்டம் மேலையூரில் திரு. தெ. பொ. மீ. அவர்கள் தலைமையில் பேசிய பேச்சின் எழுத்து வடிவமாகும். பேச்சு நடையிலிருந்து எழுத்து நடைக்கு மாற்றப் பெற்றுள்ளதேயன்றி வேறெம் மாற் றங்களும் செய்யாமல் வெளியிடப் பெறுகிறது.

நி.ஆ-ர்.

திருவருள் என்று சொல்ல நாம் தயாராக இருக்கிறோம். அதைப்போல மற்றொரு பகுதி வரும்போது ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். அதைத்தான் வள்ளுவன் சொன்னான்,

'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்

என்று. நல்லது வரும்போது அநுபவிக்கிறவன், தீமை வரும்போது கலங்கக்கூடாது. அதுபோல் இவர்கள் என்ன செய்தார்கள்? சமுதாயத்திலே இரண்டையும் நீ ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கினார்கள். ஜைனசியத்திற்கு ஒரு பெரிய 'மாற்று முறிவு' கொடுத்தார்கள்.

"பொன்னு மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந்திருவும் புணர்ப்பானை......"

'தவிர்க்கமுடியாதது' தப்பு வரத்தான் செய்யும்.

"பின்னை யென்பிழையைப் பொறுப்பானை"

பிழை பண்ணத்தான் பண்ணுவேன். ஆனால்,

I am always consciousof the fate that I am committ ing and he is there to forgive"

"பிழையெலாந் தவிரப் பணிப்பானை,
இன்ன தன்மையனென்றறியொண்ணு எம்மானையெளி
வந்தபிரானை
அன்னம் வைகும் வயற்பழனத் தணியாரூரானை
மறக்கலுமாமே

என்று போகிறது பாட்டு.

அப்போது பேரின்பத்தோடு மேலுலகம் எய்தல் உறின், மோட்சம், சொர்க்கம், இந்த உலகம்— இந்த மூன்றும் வேண்டுமாயின் ஒரே கடையில் கிடைக்கிறது.

"ஓதிய உலகுக்கெல்லாம் எம்பெருமான்"
உலகத்திற்கெல்லாம் பிறப்பாகவும், அதை விடுகின்றவனு கவும் இருக்கிறவன் அவனேதான்.

"என் திசைக்கும் பந்தமும் வீடும் பரப்புகின்றேன்" அந்தந்த இடத்திலே வருகிற அடிகள். சமூக வரலாறு வைத்து இதைப் பார்க்க வேண்டும் என்ன தைரியம் இருக்க வேண்டும்? பந்தத்தை இறைவன் என்று சொன்னுல் ஜைனர்கள் கதி என்னவாகும்? எல்லாவற்றையும் விட்டு, பரிநிர்வாணத் தன்மைதான் பரம்பொருளின் தன்மை பரம்பொருளே இல்லை என்று சொல்லுகின்ற அந்தப் பரி நிர்வாணத் தன்மைதான் வீடுதலையென்று நினைக்கின்ற சமயத்திற்கு எதிர்த்தாற்போல் போய், பந்தமே அவன் தான் என்று சொன்னுல் எப்படி?

"குணங்கள் நீ. குற்றங்கள் நீ" என்று பாடியிருந்தால் எதுகை, மோனை என்று வைத்துக் கொண்டிருக்கலாம் "குற்றம் நீ, குணங்கள்நீ, கூடலாலவாயிலாய்" என்று பாடு வார். எனவே இவர்களுடைய காலத்திலே மக்களுடைய உள்ளத்திலே தோன்றிய பெரிய ஐயம் அதுதான். தீமை யின் அடிப்படை எது? ஜைனன் சொல்கிருன். எல்லா வற்றுக்கும் நீதான் காரணம் என்று. தளர்ந்து போகின்ற சமுதாயம்; செய்வது இன்னது என்று அறியாத சமுதாயம்.

எல்லையற்ற இன்பங்கள் உலகத்திலேயே நிறைய இருக் கின்றன. ஜைனம் பேசுகிறது. அனுபவிக்காதே என்று. இல்லாமல் போனுல் அனுபவிக்காமல் இருக்கலாம், அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. சாதாரண சாப்பாடுகூடக் கிடைக்காமல் திண்டாடும்போது, இன்றைக்கு விரதம் என்ருல் எப்படி, இல்லாவிட்டாலும் அதுதானே. ஆனுல் எல்லா வகைப் பண்டங்களையும் செய்து வைத்துக்கொண்டு,

அதைத்தொடாதே என்றால் அதற்கு சித்தப்பிரக்ஞை மனோ நிலை வேண்டும். அப்படியே தொடமுடியவில்லை என்றாலும், கையைக் கட்டிப் போட்டுவிட்டாலும், வாயினாலே, அடாஅடா, நாக்கை நீட்டினால் நாய் கெட்டது, தண்ணி அவ்வளவு ஊறும். இப்படிப்பட்ட மனோநிலை இருக்கிறது. அதற்கு உறவு செய்கின்ற செயல் நிலை-- இரண்டும் இருக்கிறது இந்தச் சமுதாயத்திலே. பல்லவர்கள் வெற்றியும், சோழர்கள் வெற்றியும் காரண மாக நாட்டிலே செல்வம் கொழிக்கிறது. ஆனால் ஜைனன் சொல்கிறான், அனுபவிக்காதே என்று. சமுதாயம் அல்லல் படுகிறது. வைத்துக்கொண்டு அனுபவிக்க முடியவில்லையே என்று. அந்த நேரத்தில் இவர்கள் வருகிறார்கள், கவலைப்படாதே, அனுபவி என்று சொல்கிறார்கள்.

(வளரும்)


Phone No: 222 Tel. Add. "JEWELLERY"
T. N. G. S. T. No. 209126. Post Box No. 14
L. No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்,

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.

தென்னார்க்காடு மாவட்டம் — 608 001

# "9, 10, 11 - ஆம் திருமுறைகள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை"

கா. ம. வேங்கடராமையா எம். ஏ.,

திருவாக்கும் செய்கருமம்
கைக்கூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்
பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும்
ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம்
கை—கபிலதேவநாயனார்.

(1)

முதற்கண் தொகுப்பாசிரியரின் (நம்பியாண்டார் நம்பிகளின்) இலக்கியக் கொள்கைகளைக் காண்போம்:

1) ஞானசம்பந்தர் பாடியருளியவற்றை முதன் மூன்று திருமுறைகளாகப் பண்ணடைவிலும், அடுத்துப் பண்ணடைவில் அப்பர் அருளியவற்றை நான்காம் திருமுறையாகவும், திருக்குறுந்தொகை என்னும் பண்ணில் அமைந்த பதிகங்கள் எல்லாவற்றையும் 5-ம் திருமுறையாகவும், திருத்தாண்டகமாக அமைந்த அப்பர் பதிகங்கள் ஆறும் திருமுறையாகவும், சுந்தரர் பாடியனவற்றை 7-ம் திருமுறையாகவும், மணிவாசகர் அருளிய திருவாசகத்தை 8-ம் திருமுறையாகவும் அமைத்துப் பெரும்பாலும் தம் நாளிலும் சிறிது முன்னும் திகழ்ந்த அருளாளர் பாடிய இசைப்பாடல்களைத் தொகுத்துத் திருப்பல்லாண்டை இறுதியில் அமைத்து அதனை 9-ம் திருமுறையின் இறுதியில் அமைத்து அதனை 9-ம் திருமுறையாக நிறுத்தித் தோத்திரப் பாடல்களின் தொகுப்பை நிறைவு செய்தார் நம்பிகள்: திருப்பல்லாண்டை 9-ம் திருமுறையின் இறுதியில் வைத்தது, தோத்திரப் பாடல்களின் தொகுப்பு இதுவரையேயாகும் என்பதை அறிப்பதுபோல் தோற்றமளிக்கிறது.

'வித்தகப் பாவில் முந்திறத்து அடியர்' பாடியவற்றை 7 திருமுறைகளாகத் தொகுத்தமைக்கும், பின்னர் 11-ம் திருமுறை வரை அமைத்தமைக்கும், சேக்கிழார் புராணத்தில் ஓர் அமைதி கூறப்பெற்றுள்ளது; அப்பாடல் பின்வருமாறு:-

மந்திரங்கள் எழுகோடி*
ஆதலில் மன்னுமவரி
இந்தவகை திருமுறைகள்
ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறும் மந்திரங்கள்
பதினொன்றும்
ஷடங்கமந்திரம் இருதயம்,
சிரசு, சிகை, கவசம்,
நேத்திரம்,
அஸ்திரம் என ஆறு;
பஞ்சப்பிரமமந்திரம் ஈசானம்,
தத்புருஷம்
அகோரம், வாமதேவம்,
சத்தியோ ஜாதம் என
ஐந்து ஆகப் பதினொன்று

ஆதலினல் அந்தமுறை நான்கினேடும் முறை பதினொன்ருக்கிஞர்.

2) தொகுப்பு முறை

திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் ஆகிய மூவர் தேவாரம் ஒரு தொகுப்பு; திருவாசகம் ஒரு தொகுப்பு; பெரும்பாலும் தில்லைத் தமிழ் ஆகியனவும், சமயகுரவர் நால்வர்க்குப் பிற்பட்டவர்களும் திருமுறை தொகுத்த அன்பர் காலத்தும் சிறிதும் முன்னும் திகழ்ந்த அருளாளர்கள் பாடிய தோத்திரப் பாடல்கள் ஒரு தனித் தொகுப்பு; தோத்திரமும் சாத்திரமும் ஆகத் திகழ்வது — சிவ கதிக்கு வித்து ஆவதும் கருவேலையைக் கடக்கும் தெப்பமாவதும் ஆன திருமூலர் திருமந்திரம் அடுத்து அமைவது; முதல் 9 திருமுறைகளிற்காணுதனவும், கண்டவற்றின் சாரமும் இப் பத்தாம் திருமுறையில் உண்டு. அந்நாள்வரை அருளப் பெற்றுக் காலவெள்ளத்தில் அழிந்தன போக எஞ்சிய சைவ சமயச் சிறு நூல்கள் 26 கிடைத்தன; அவற்றை ஒரு திருமுறையாக நம்பிகள் தொகுக்க விழைந்தார்: பாணனர் பத்திரனர்க்காகச் சேரமான் பெருமாணயனர்க்கு உய்த்தருளின திருமுகப் பாசுரம் (ஆகிய ஒரு சீட்டுக்கவி) தனிப் பிரபந்தம் அன்று எனினும், செந்தமிழ் மதுரம் கூட்டுணவெழுந்த வேட்கையால் மதுரையம்பதியில் எழுந்தருளியுள்ள திருவாலவாயுடையார் அருளிய திருப்பாடலாகிய திருமுகப்பாசுரத்தை முதற்கண் அமைத்தார். வித்தகப் பாடல்கள் முத்திறத்து அடியார்களுக்கு முந்தித் திகழ்ந்தலர்களும், திருப்பதிகப் பாமாலை பாடிப் பரவுதற்கு முன்னேடியாக விளங்கியவர்களும் ஆகிய காரைக்கால் பேயார் பதிகங்கள் இரண்டு இருத்தலை அறிந்த நம்பிகள் அவற்றை அடுத்து அமைத்துத் தாம் மேற்கொண்ட

---

*ஏழு இறுதி:- நம, சுவாகா, சுவதா, வெளஷட், வஷட்; பட், உம்பட் என்பன. (உயர்திரு. மு. அருணசலம் அவர்கள் எழுதிய திருவிசைப்பா - பாவும் பயின்ற நிலையும்)

பணியாகிய பிரபந்தத் தொகுப்புப் பணியைத்தொடங்குவார். அம்மையார் அருளிய இலக்கியச் சிறுநூல்கள் இரண்டையும் அடுத்து அமைத்தார். பின்னர் ஐயடிகள் காடவர்கோன் முதலானோர் தம் நூல்களை அமைத்தார். இங்ஙனம் தொகுத்தவை முப்பது ஆகும். பின்னர்த் தாமே பாடிய நூல்களை இறுதியில் சேர்த்து 11-ம் திருமுறையை நிறைவு செய்தார்.

நம்பிகள் பாடியவை பத்து நூல்கள். இவற்றுள் சிறப்பாகக் கருதத்தக்க நூல் திருத்தொண்டர் திருவந்தாதி. அடியவர்களுள் பெயர்த் தொகுப்பாக அமைந்தது சுந்தரர் அருளிய திருத்தொண்டத்தொகை: இத்தொகை நூலுக்கு வகையாக அமைந்தது தொண்டரந்தாதி. இதன் விரிநூலே பெரியபுராணம். பெரியபுராணம் பாடுவதற்குத் திருவருளால் ஆகிய அடிப்படையமைப்பே இத்திருமுறைகளின் தொகுப்பு. இக் கொள்கையை வலியுறுத்துமாறு அருளப்பெற்றனவே இவருடைய எஞ்சிய நூல்களும் ஆம். எனவே திருமுறைத் தொகுப்புத் தொடங்கச் செய்த அரசன் தொகுத்த நம்பிகள் ஆகிய இருவரின் கொள்கை பின்னர்ச் சேக்கிழாரடிகளால் பெரியபுராணம் பாடுவதற்கு அடிப்படை அமைப்பாக விளங்கியமை நன்கு போதரும்.

3. முதல் 8 திருமுறைகளில் காண்பவை சிவ பெருமாற்கே அமைந்த பாடல்கள். அவற்றுளும் 1-7 திருமுறைகளில் தில்லையைப் பற்றியவை 11 திருப்பதிகங்களே. 8-ம் திருமுறையாகிய திருவாசகத்தில் 51 பதிகங்கங்களுண்டு; தில்லைபாதி திருவாசகம் பாதிஎன்ற மூதுரைக்கு ஏற்பப் பாதிப் பதிகங்கள் தில்லைக்கு உரியவை. 9-ம் திருமுறையில் கண்ட 29 பதிகங்களில் 16 பதிகங்கள் தில்லையைப் பற்றியனவாம். எனவே தில்லை திருப்பதிகங்களைத் தொகுத்தலே 9-ம் திருமுறைத் தொகுப்பின் நோக்கம் அல்லது கொள்கையாதல் தகும்.

4. தோத்திரங்கட்கும் இலக்கியங்கட்கும் இடையில் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் அமைந்த திருமந்திரம் அமைக்கப்பெற்றது. 1-9-ல் சிவ பரம்பொருளுக்குரிய தோத்திரங்களே அமைந்திருக்கத், திருமந்திரமாலையில் இறைவனின் பிரிவாற்றலாகிய சிவசக்தியின் அருளாற்றலைச் சக்திபேதம் - பயிரவி மந்திரம் - பூரணசக்தி முதலிய தலைப்புக்களில் கூறப்பெறுதலைக் காணலாம். எனவே சிவம் சக்தி மந்திரங்கள்-சக்கரங்கள் முதலியவற்றை அறிவிப்பது, தோத்திரங்களை அடுத்து அமைக்கப்பெற்றது.

5. 1-7 திருமுறைகளில் மூத்த பிள்ளையார்க்கும் முருகப் பெருமாற்கும் தனிப்பாடல்கள் இல்லை;

இறைவனோடு சார்த்தியே அன்னோர் குறிக்கப் பெற்றனர். 9-ம் திருமுறையில் சேந்தனார் அருளிய திருவிடைக்கழித் திருவிசைப்பா முருகன் அருள் வேட்டலாக அமைந்துள்ளது. ஆனால் 11ம் திருமுறையில் விநாயகரைப்பற்றியவை 3 நூல்கள்; முருகவேளைப் பற்றியது ஒரு நூல்; 'சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்பர் திருமூலர். ஆகலின் சிவபெருமானைப் பற்றிய நூல்கள் 25 இடம் பெற்றுள்ளன. நம்பிகள் பாடியது 10. அவற்றுள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியதனால் சுந்தரர் பற்றிய செய்திகளும், ஆளுடைய பிள்ளை திருவந்தாதி, விருத்தம், மும்மணிக்கோவை கலம்பகம், திருத்தொகை எனும் 6 நூல்களால் சம்பந்தர் வரலாற்றுச்செய்திகளும் திருநாவுக்கரசர் திருஏகாதசமாலையால் திருநாவுக்கரசர் பற்றிய செய்திகளும் முன்னோடியாகத் தரப்பெற்றன. 'ஆனை முகன்முருகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு' ஆகியோரைப் போற்றுவதற்குரிய பாடல்களைத் தொகுத்தலே 9, 10, 11-ஆம் திருமுறை தொகுப்பின் நோக்கம் என்னலாம்.

6. திருவேகாதச மாலையை 11-ம் திருமுறையின் இறுதிக்கண் வைத்தது, திருமுறைகளின் தொகுப்பு ஏன் பதினொன்றுகும் என்பதை உணர்வதற்குரிய திருவருட்குறிப்பாகக் கொண்டு, தொழுது மன்பதைகள் உய்வதற்காகவேயாம் என்பதும் நம்பிகளின் நோக்கம் போலும்.

7. கோயில் பதிகங்கள் முதற் குறிப்புடன் அமைக்கப்பெற்று இருப்பதும் நூலைக்கண்டு அறிதற்பாலது

(வளரும்)

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

பல்வலிக்கு

1. கருவப்பட்டைதூள், கத்தகாம்பு, இவை இரண்டையும் வென்னீரில் ஊறவைத்து நன்ருக வடிகட்டி, கால் ஆழாக்கு வீதம் 3வேளைஉட்கொள்ள, பல்லரணை தொண்டைப்புண், ஈறுவீக்கம் நீங்கும்

சோகை நீங்க

2. வில்வஇலைச்சாறு எடுத்து அத்துடன் மிளகுத்தூள் சேர்த்துக் கொடுக்கச் சோகை தீரும்.

உடல் மெலிய

3. கரிசலாங்கண்ணி கீரையை உணவில் அடிக்கடி சேர்த்து வந்து வாரம் ஒரு நாள் உபவாசமிருந்தால் பலன்தரும் கண்டிப்பாக பகலில் தூங்கக் கூடாது.

Dr. N. சடையப்பன் S. M. P.

# வாடாமல்லிகை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் **செ. சிங்காரவேலன்**, எம் ஏ.,பி,எச்.டி.,

சடை : செங்கோல் பிழையாத மன்னர் பெருமானே! தாங்களும் தேவியாரும் நம்பியாரூரனை வளர்க்கின்ற தெய்வீக வேலியாகிவிட்ட பிறகு என்ன குறை? நம்பி! அரசரோடு போய் இருந்து வருகிறாயா? கண்ணு!

நம்பி : தாங்கள் சொல்லுவது போலவே சென்று வருவேன் தந்தையே!

நர : ஆ...கா! என்பெரும்பேறே பேறு! அமுதா! ......தேவீ! நீ;...

அரசி : (உணர்ச்சிப் பெருக்குடன்) கரும்பு தின்பதற்குக் கூலியா சுவாமி!

அந்தணர் திலகமே! அவ்வப்போது தாங்கள் துணைவியாரோடு அரண்மனைக்கு வரவேண்டும்! அதுதான் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி.

(இருவரோடுவந்த பல்லக்குகள் மூவரோடு-நம்பியாரூரனோடு புறப்படுகின்றன;வீதி மறையும்வரை, ஒலிகள் தேயும் வரை-பார்த்துக் கொண்டிருந்த சடையனார் திரும்புகின்றார்; இசைஞானி புன்னகையோடு நிற்பதைக் காண்கின்றார்.)

சடை : இசைஞானி! என் இனிய துணைவீ! உன்னைக் கேளாமலேயே..

இசை : (புன்முறுவல் பூக்க) சுவாமி! என்ன வார்த்தை சொன்னீர்கள்? தங்களது திருவுள்ளத்திற்கு மாறாக நான் நினைப்பதுகூட உண்டா சுவாமி!

சடை : ஆ... கா! இசை... ஞா...னி! ஆம்; உன்னை அறியாதவனா நான்?

இசை : சுவாமி! அரசரே—தேவியாரே விரும்புகின்றார்கள் என்றால் நம் ஆரூரானுக்கு வந்த யோகத்தைப் பார்த்தீர்களா?

சடை : அவனுக்கு வந்த யோகமா? யோகத்திற்காகவே வந்தவனாயிற்றே அவன்?

இசை : தங்கள் பேச்சு என்னை உருக்கிவிட்டது: தாங்கள் அரசரோடு பேசியதையும், அரசர் தங்களுடன் உரையாடியதையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன் சுவாமி: நம் ஆரூரான் என்னைப் பார்த்தபடியே கைகளைக் கூப்பி வணங்கி விட்டுப் பல்லக்கில் ஏறிக் கொண்டபோது ... ...

சடை : ஏறிக் கொண்டபோது ... ...

இசை : என் மனம் பெருமையால் பூரித்துப் போயிற்று சுவாமி! ஒருகணம் பாசம் கண்களை மறைத்தாலும் அன்புக் கணவர், நாட்டின் அரசர் இருவரது உள்ளத்தின் ஆழ்ந்த உணர்ச்சிகள் என் தெளிவுக்குத் துணை நின்றன, சுவாமி!

சடை : உனக்கு 'இசைஞானம்' மட்டுமே உண்டு என்று அறிந்திருந்தேன் இந்நாள் வரை; 'உலகியல் ஞானம்' 'தவஞானம்' ஆகியவற்றில் நீ உயர்ந்து நிற்கும் ஓர் அற்புதப் பெண் என்று இப்போதுதான் உணர்ந்து கொண்டேன்!

இசை : உச்சிக்கால வழிபாட்டிற்குத் திருவமுது படைக்க வேண்டுமே! வாருங்கள் செல்வோம்!

சடை : ஆமாம்; ஆமாம்! மறந்தே போயிற்று! இதோ நான் நீராடி விட்டு, 'யாகம்' செய்ய வருகின்றேன், இசை ஞானி! (ஆற்றுப்புறம் விரைகின்றார்; இசைஞானி வீட்டிற்குள் செல்கின்றாள்)

## காட்சி 1 இ [காட்சி மாற்றம்]

முதற்காட்சித் தொடர்ச்சி;

நர : நம்பியாரூரன் நம் அரண்மனையில் வளர்ந்த அந்த இனிய நாட்கள் இப்போது நினைத்தாலும் தென்றலாக மெல்லிய பூ மணமாக நெஞ்சில் படர்கின்றன, அமுதா!

அரசி : நம்பியாரூரனின் திருமணம் நடைபெறப் போகிறதென்றவுடனே எவ்வளவு மகிழ்ச்சி, நமக்கு, அரசே! ஆனால், இறைவன் திருவருளால் திருமணம் நடைபெறாமல், தடைப்பட்ட போதோ ... ...

நர : ஆம்; இறைவன் திருவிளையாடலை அறிவார் யார், அரசி! கிழவேதியராக வந்து தடுத்து ஆட்கொண்ட வரலாறு தெய்வீக வரலாற்றில் ஒரு புதிய படலம்!

அர: ஆம், பெருமானே! மனித நிலையிலிருந்து நமது அன்பு மகளைத் தெய்வ நிலைக்கு உயர்த்திவிட்ட திருப்பம் அல்லவா, அது!

நர: 'வெண்ணெய் நல்லூர்ப் பித்தன்' என்ற பெயரிலே வந்து தன்னுடைய கருணை நாடகத்தை ஆடிவிட்டான் எல்லாம் வல்ல சித்தன்! அல்லவா மகாராணி!

அர: புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார் பெற்ற மகள் — புனிதா எவ்வளவு நல்ல பெண்! பண்புடையவள்; அறிவின் செல்வி!

நர: நம்பியாரூரரோடு தன் வாழ்க்கை பிணைவதை எவ்வளவு ஆவலோடு எண்ணியிருப்பாள் புனிதவதி! ஆனல் அவள் எண்ணக் கனவுகள் எவ்வளவு சீக்கிரம் சரிந்து விட்டன, பார்த்தாயா?

அர: ஒரு நேரம் இல்லாவிட்டாலும் மறுநேரம் என் மனத்தில் புனிதவதியை எண்ணும்போது உண்டாகும் வேதனை ... ...

நர: உனக்கு மட்டும்தானா அமுதா! திருமணப் பந்தலில் திருமணம் நின்று போனதும், எல்லோரும் குழம்பி நின்று விட்டதும், மயங்கிக் கீழே சாய்ந்துவிட்டாள், அந்த அன்பு மகள்!

அர: எந்தவொரு பெண்ணுக்கும் இப்படியொரு சோதனை உண்டாகக் கூடாது, அரசே! மணாளனாக வந்த அழகனை இவ்வாறு தட்டிப் பறித்துக் கொண்டது இறைவன் திருவருள் என்றால் ... ...

நர: பாவம்! (உணர்ச்சிப் பெருக்குடன்) மலர்ந்து மணம் பரப்ப வேண்டிய அந்தத் தெய்வமலர்-இதழ் விரித்து ஒளிபரப்பிய உடனேயே உதிர்ந்துவிட நேரிட்ட கொடுமை எண்ணினாலும் நெஞ்சைச் சுடுகிறது அமுதா!

அர: (நீண்ட பெருமூச்சுடன்) ... ... புத்தூர் வேதியர் பெற்றெடுத்த அப் பூம்பாவைக்கு இனி வாழ்வே இல்லையா சுவாமி!

நர: ஏன் இல்லை? திருமணம் நல்ல வேளையாக நடைபெறு முன்னரே தடுக்கப்பட்டுவிட்டதால், அவளுக்கு ஏன் ஒரு புதுவாழ்க்கை அமைக்கக் கூடாது?

அர: புது அழகு ததும்பிய அந்த இளம் பெண்ணின் திருமுகம் என் மனத்தை விட்டு அகலவேயில்லை, அரசே! ... ...

நர : (சிந்தித்து) ஏன், அமுதவல்லி! இப்படிச் செய்தால் என்ன?

அர : சொல்லுங்கள் வேந்தே!

நர : நம் இளவரசனுக்குப் புனிதாவை மணம் பேசினால் என்ன?

அர : என்ன வார்த்தை அரசே! அவர்களோ ஆதி சைவர்கள்! நம்முடைய அரச மரபினரோடு தொடர்பு கொள்ளுவது, அவர்களது பாரம்பரியத்துக்கு இழுக்கு ஆகாதா?

நர : (மகிழ்ந்து) உண்மைதான், ஒப்புக் கொள்ளுகின்றேன், அமுதா! இருந்தாலும் நம் நம்பியாரூரனைப் பொறுத்த வரையில் மணமகளாக இருந்த அந்த இளம் பெண், ஒரு முறையில் உடன்பிறந்தாளாகவே உள்ள நம் அரசகுமாரனுக்கு ஏற்றள் என்று அவர்கள் கருதலாம் அல்லவா?

அர : (அப்படி ஒரு வாய்ப்பு உண்டாகுமானால், நமது மகன், சிவபராக்கிரமனுக்கு அவளைவிட ஒரு நல்ல மனைவி கிடைக்க முடியாது! ஆம் மட்டற்ற மகிழ்ச்சியே எனக்கும், மன்னா!

நர : அமுதா! நம் அமைச்சரோடு கலந்து பேசி ஏற்பாட்டினைத் தொடர்வோம்! ... ... இம் ... ... நானே அடுத்த கிழமை, திருநாவலூர் போகும்போது புத்தூர் சென்று கலந்துபேசி முடிவெடுக்கக் கருதுகின்றேன்.

அர : இறைவன் திருவுள்ளம் இருந்தால் இந்தத் திருமணம் நிறைவேறட்டும்! அந்த வாடாமல்லிகை வாட்டம் தீரட்டும்! தெய்வீகத் திருவிளக்கு மீண்டும் புத்தொளி வீசட்டும்!...... அப்போதுதான் என் மனப்புண் ஆறும்! வாருங்கள் சுவாமி! வழிபாடு செய்வோம்!

[செல்லுகின்றார்கள்]

(வளரும்)

# ஆலய பூஜைப் படிக்காசு நிதி
## நன்கொடையளித்த அன்பர்கள் விவரம்

5—4—83 முடிய ரூ. 15025-50

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. | துரைராஜ் | ரூ. | 5-00 |
| 2. | திரு. | K. R. சுவாமிநாதன், வில்லிவாக்கம். | ரூ. | 6-00 |
| 3. | திருமதி. | T. காஞ்சனா, இராமநாதபுரம். | ரூ. | 5-00 |
| 4. | திருமதி. | மீனாட்சி, மதுரை. | ரூ. | 5-00 |
| 5. | திரு. | மீனாட்சிசுந்தரம், மதுரை. | ரூ. | 10-00 |
| 6. | திரு. | சோமசுந்தரம், மதுரை. | ரூ. | 11-00 |
| 7. | திரு. | அருணாசலமுதலியார், மதுரை. | ரூ. | 25-00 |
| 8. | திருமதி. | அமராவதி, நெல்லை. | ரூ. | 15-00 |
| 9. | திரு. | ஞானப்பிரகாசம்பிள்ளை, பெண்ணாடம். | ரூ. | 10-00 |
| 10. | திரு. | T. M. வெள்ளைவாரணம், பனசை. | ரூ. | 10-00 |
| 11. | திரு. | D. இராஜமாணிக்கம், குரோம்பேட்டை | ரூ. | 5-00 |
| 12. | திரு. | அப்பு, துர்க்காகுடில் கும்பகோணம் | ரூ. | 5-00 |
| 13. | திரு. | S. K. சந்திரசேகரன், I A S தருமபுரம். | ரூ. | 5-00 |
| 14. | திரு. | R. செல்வராஜ். தருமபுரம். | ரூ. | 5-00 |
| 15. | திரு. | M. R. மகாதேவன், மணப்பாறை | ரூ. | 5-00 |
| 16. | திருமதி. | மீனாட்சிபிச்சையாபிள்ளை, மதுரை. | ரூ. | 11-00 |
| 17. | திரு. | K. சந்தன், மதுரை. | ரூ. | 5-00 |
| 18. | திரு. | மீனாட்சிசுந்தரம்பிள்ளை, மதுரை. | ரூ. | 21-00 |
| 19. | திரு. | அப்பு, துர்க்காகுடில், கும்பகோணம். | ரூ. | 5-00 |
| 20. | திரு. | K. N. கணேஷ், பம்பாய். | ரூ. | 11-00 |
| 21. | திரு. | சொ. சொ. மீ. சுந்தரம், மதுரை. | ரூ. | 11-00 |
| 22. | திரு. | S. அருணாசலமுதலியார், மதுரை. | ரூ. | 6-00 |
| 23. | திரு. | ராம. சேவுகன்செட்டியார் ,, | ரூ. | 5-00 |
| 24. | திரு. | ந. வீ. சிவசண்முகம் ,, | ரூ. | 5-00 |
| 25. | திரு. | P. S. ஆதிமூலம் ,, | ரூ. | 2-00 |
| 26. | திரு. | K. S. வரதராஜன் ,, | ரூ. | 2-00 |
| 27. | திரு. | M. S. சங்கரசுப்பிரமணியன் ,, | ரூ. | 2-00 |
| 28. | திரு. | சி. நடராஜன் ,, | ரூ. | 25-00 |
| 29. | திரு. | லஷ்மிபதி ,, | ரூ. | 2-00 |
| 30. | திரு. | S. இரமசாமி ,, | ரூ. | 2-00 |
| 31. | திரு. | S. செல்லமுத்து ,, | ரூ. | 5-00 |
| 32. | திரு. | P. A. இரத்தினம் ,, | ரூ. | 5-00 |
| 33. | திரு. | S. லெஷ்மிநாரயணன் ,, | ரூ. | 5-00 |
| 34. | திரு. | M. S. ஆவுடையப்பன்செட்டியார் மதுரை | ரூ. | 2-00 |
| 35. | திரு. | S. பரமசிவம் மதுரை | ரூ. | 4-00 |
| 36. | திரு. | M. இராதாகிருஷ்ணன் மதுரை | ரூ. | 25-00 |

6—6—83 வரை கூடுதல் ரூ. 15,316-50

# திருக்கணித பஞ்சாங்கம்

தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

ருத்ரோத்காரி-ஆனிமீ (1983 - ஜுன்மீ - ஜுலைமீ)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்வ | ஆங்கிலம்வ | கிழமை | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | 15 | புதன் | பஞ்சமி 18-59 | ஆயில்யம் 18-33 |
| | | | | சிம்மசந்திரன் 18-33 |
| | | மிதுன சூரியன் 12-16 | | |
| 2 | 16 | வியாழன் | சஷ்டி 16-24 | மகம் 16-46 |
| 3 | 17 | வெள்ளி | சப்தமி 14-12 | பூரம் 15-22 |
| | | | | கன்னி சந்திரன் 21-05 |
| 4 | 18 | சனி | அஷ்டமி 12-27 | உத்தரம் 14-25 |
| 5 | 19 | ஞாயிறு | நவமி 11-11 | அஸ்தம் 13-58 |
| | | | | துலா சந்திரன் 25-55 |
| 6 | 20 | திங்கள் | தசமி 10-26 | சித்திரை 14-01 |
| 7 | 21 | செவ்வாய் | ஏகாதசி 10-12 | சுவாதி 14-35 |
| 8 | 22 | புதன் | துவாதசி 10-28 | விசாகம் 15-38 |
| | | | | விருச்சிக சந்திரன் 9-19 |
| 9 | 23 | வியாழன் | திரயோதசி 11-14 | அனுஷம் 17-09 |
| 10 | 24 | வெள்ளி | சதுர்த்தசி 12-26 | கேட்டை 19-05 |
| | | | | தனுசு சந்திரன் 19-05 |
| 11 ஜூ | 25 | சனி | ○பௌர்ணமி 14-02 | மூலம் 21-25 |
| 12 ர | 26 | ஞாயிறு | பிரதமை 15-59 | பூராடம் 24-03 |
| 13 ஸ | 27 | திங்கள் | துதியை 18-13 | உத்திராடம் 26-56 |
| | | | | மகர சந்திரன் 6-45 |
| 14 | 28 | செவ்வாய் | திரியை 20-37 | திருஓணம் நாள் முழுவதும் |
| 15 | 29 | புதன் | சதுர்த்தி 23-04 | திருஓணம் 5-56 |
| | | | | கும்ப சந்திரன் 19-27 |
| 16 | 30 | வியாழன் | பஞ்சமி 25-25 | அவிட்டம் 8-57 |
| 17 | 1 | வெள்ளி | சஷ்டி 27-29 | சதையம் 11-47 |
| 18 | 2 | சனி | சப்தமி 29-06 | பூரட்டாதி 14-18 |
| | | | | மீன சந்திரன் 7-43 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | | 3 | ஞாயிறு | அஷ்டமி நாள் முழுவதும் | உத்திரட்டாதி 16-19 |
| 20 | | 4 | திங்கள் | அஷ்டமி 6-08 | ரேவதி 17-42 |
| | | | | | மேஷ சந்திரன் 17-42 |
| 21 | | 5 | செவ்வாய் | நவமி 6-27 | அசுவனி 18-21 |
| 22 | | 6 | புதன் | தசமி 6-00 ஏகாதசி 28-47 | பரணி 18-15 |
| | | | | | ரிஷப சந்திரன் 24-06 |
| 23 | ஆ | 7 | வியாழன் | துவாதசி 26-51 | *கிருத்திகை 17-24 |
| 24 | ர | 8 | வெள்ளி | திரயோதசி 24-18 | ரோகிணி 15-53 |
| | ஜ | | | | மிதுன சந்திரன் 26-54 |
| 25 | | 9 | சனி | சதுர்த்தசி 21-14 | மிருகசீரிஷம் 13-48 |
| 26 | | 10 | ஞாயிறு | அமாவாசை 17-48 | திருஆதிரை 11-19 |
| | | | | | கடக சந்திரன் 27-16 |
| 27 | | 11 | திங்கள் | பிரதமை 14-11 | புனர்பூசம் 8-34 |
| 28 | | 12 | செவ்வாய் | துதியை 10-31 | பூசம் 5-43 ஆயில்யம் 26-58 |
| | | | | | சிம்ம சந்திரன் 26-58 |
| 29 | | 13 | புதன் | திரிதியை 6-58 சதுர்த்தி 27-42 | மகம் 24-28 |
| 30 | | 14 | வியாழன் | பஞ்சமி 24-52 | பூரம் 22-23 |
| | | | | | கன்னி சந்திரன் 27-56 |
| 31 | | 15 | வெள்ளி | சஷ்டி 22-34 | உத்தரம் 20-50 |
| 32 | | 16 | சனி | சப்தமி 20-55 | அஸ்தம் 19-54 |
| | | | | கடக சூரியன் 23-09 | |



*—)(——)(——)(——)(—.—)(——)(——)(——)(—*

# திருவருட்பாடலில் ஒரு திருப்பாடல்

*—)(——)(——)(——)(—.—)(——)(——)(——)(—*

'சித்தாந்த வித்தகர்'

ந. ரா. முருகவேள், M. A.. M.O. L.

(1) முன்னுரை:

திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகளார் பாடியருளிய திருவருட்பாத் தொகுதியில், ''மகாதேவமாலை'' என்னும் செய்யுட்பகுதி ஒன்று உள்ளதனை, அன்பர்கள் அனைவரும் அறிவர். அதன் முதற் பாடலாக விளங்குவது,

கருணைநிறைந்து, அகம்புறமும் துளும்பி வழிந்து,
　　உயிர்க்கெல்லாம் களைகண் ஆகித்
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
　　கண்ணுடையோய்! சிதையா ஞானப்
பொருள்நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
　　மலர்வாயோய்! பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையும் உட்
　　கசிந்துஉருக்கும் வடிவத் தோயே!

என்னும் அழகிய திருப்பாடல். ''இறைவன் கருணை நிறைந்தவன்; எல்லாப் பொருள்களின் உள்ளும் புறம்பும் நீக்கமறக் கலந்து நிறைந்திருப்பவன்; உயிர்களின் துன்பங்களையெல்லாம் போக்கியருள்பவன்; உயிர்களுக்கு அறிவை வளர்த்து, அவைகளை இன்பநிலை பெறுமாறு செய்விப்பவன்; அவனுடைய திருவாயினின்றே ஞானப்பொருள் நலங்கள் நிறைந்த வேதங்கள் தோன்றின; அவனுடைய செயலும் இயலும் ஆகிய வடிவமானது, எத்தகைய அறியாமை மிக்கவர்களின் கருங்கல் மனத்தையும்கூடக் கசிந்து உருகுமாறு செய்துவிடும் சிறப்பு உடையது'' என்பது, இப்பாடலின் பொதுவான திரண்ட பொருள்;

(2) சொற்பொருள் நலங்கள்;

இனிய சிறந்த சொற்களால், எளிய தெளிவான நடையில், ஒவ்வொரு சொல்லும் சொற்றொடரும் ஆழ்ந்த அனுபவ நுண்பொருட்செறிவு உடையதாகத் திகழ, இத்திருப்பாடல் அமைந்துள்ளது. இறைவன் கருணையையே தனக்குரிய இயல்பாகக் கொண்டவன்; இறைவனே வேதாகமங்களை அருளிச் செய்தவன்; அவன்றன் திருமேனியும், உறுப்புக்களும், கருவிகளும், தொழில்களும் ஆகியன எல்லாம் அருளாலேயே அமைந்தவை; அவனது திருவருளே உயிர்களுக்கெல்லாம் ஆதாரம்; அவனே உயிர்கள்தோறும் உயிர்க்குயிராய்ப் புகுந்து நின்று இயக்குபவன்; இறைவனே ஐந்தொழில்களையும் நிகழ்த்தி, சர்வ சீவ சாட்சியாய் இலங்குகின்றான் என்னும் பற்பல அரிய சாத்திர நுண்பொருள்கள், இப்பாடலின்கண் ஒருங்கு தொகுத்துச் சுருங்கச் சொல்லப் பெற்றுள்ளன.

இதன் பொருள்நலம் எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், மொழிக்குமொழி தித்திப்பாக விளங்குகின்றது. இராயலிங்கர் ''அருட்பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை'' என்னும் அரிய பொருள்மொழியினை உலகுக்கு அளித்தவராதலின், அவர் தம் பாடல் தொடங்கும்போதே ''கருணை நிறைந்து'' எனத் தொடங்குகின்றது; பெருகிப் பரவுதல் கருணைக்கு இயல்பாகலின் ''துளும்பி வழிந்து'' எனப்பட்டது. அஃது உள்ளே தளும்பி, வெளியே வழிதலின், ''அகம்புறமும் துளும்பி வழிந்து'' என்றார். மறையை அமுதம் என்றும், வாயை மலர் என்றும் உருவகம் செய்த பொருத்தம், சிறப்புடையது' மறையைப் 'பொருள் நிறைந்தது' என்றும், சிந்தையை ஞானப் பொருள் நிறைந்தது' என்றும் விசேடித்தது, போற்றத்தக்கது. இன்பநிலை என்று வாளா கூறாமல், அறியாமை நீங்கி அறிவு பெருகிய வழியே இன்பம் உண்டாகுமாதலின், தெருள் நிறைந்த இன்பநிலை'' என்றது நுட்பம் மிக்கது. மனத்தினை மருள் நிறைந்தது என்றும், கருங்கல் பாறை என்றும், அஃது இறைவனால் கசிதல் - உருகுதல் ஆகிய இருவகை நிலைகளை எய்தியது என்றும் குறிப்பிட்ட திறம், உன்னி யுன்னி உவகையுறுதற்கு உரியது. இவற்றையெல்லாம் அவரவரே அன்புடன் நுண்ணிதிற் பல்கால் ஓதி, எண்ணியுணர்ந்து இன்புறக் கடவர். ஆதலின் அவற்றை விடுத்து, இப்பாடற்கண் இறையியல் நூல்கள் (Theology, Philosophy) கூறும் இறைமை இலக்கணங்கள் பலவும், ஒருவாற்றால் தொகுத்துணர்த்தப்பட்டுள்ள சிறப்பினை மட்டும் ஈண்டு நாம் சுருக்கமாகக் கண்டு இன்புறுவோம்:

(3) இருவகை இயல்பு:

இறைவனின் இயல்பினைப் பொதுவியல்பு (தடத்த லட்சணம்) என்றும், சிறப்பியல்பு (சொரூப லட்சணம்) என்றும், சாத்திரங்கள் இரண்டாகக் கூறும்.

(1) இத்திருப்பாடலில் "கருணை நிறைந்து, அகம்புறமும் துளும்பி வழிந்து, உயிர்க்கெல்லாம் களைகண் ஆகித் தெருள் நிறைந்த இன்ப நிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்! சிதையா ஞானப்பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்" என்பது வரையில், பொதுவியல்பு கூறப்பெற்றது. (2) "பொய்யனேன் தன் மருள் நிறைந்த மனக் கருங்கற் பாறையும் உட்கசிந்து உருக்கும் வடிவத்தோயே" என்பதல் சிறப்பியல்பு விளக்கப்பெற்றது.

(4) எண்குணங்கள்;

இறைவனை எட்டுக் குணங்கள் உடையவனாக, நூல்கள் கூறும். தெய்வப் புலவர் திருவள்ளுவரும் "எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" என்னும் திருக்குறளில், அங்ஙனம் குறித்துள்ளார். அவ்வெட்டுக் குணங்களும், இத்திருவருட்பாவில் தொகுத்துச் சுட்டப்பெற்றுள்ளன.

(1) "உயிர்க்கெல்லாம் களைகண் ஆகி- தன்வயத்தனாதல்

(2) "வடிவத் தோய்"- தூய உடம்பினனாதல்

(3) "சிதையா ஞானப் பொருள் நிறைந்த"- இயல்பாகப் பாசங்களின் நீங்குதல்

(4) "மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்"- இயற்கை யுணர்வு. முற்றுணர்வு

(6) "கருணை நிறைந்து வழிந்து"- பேரருள் உடையனாதல்

(7) "மனக்கருங்கற் பாறையும் உட்கசிந்து உருக்கும்"- முடிவிலாற்றல் உடையவனாதல்

(8) "இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்"- வரம்பில் இன்பம் உடையவனாதல்.

(5) சத்து சித்து ஆனந்தம்:

இறைவன், சத்து (உண்மை), சித்து (அறிவு), ஆனந்தம் (இன்பம்) என விளங்குகின்றனன் என நம் வேதாகம உபநிடதங்கள் யாவும் முழங்கும். இம் மூவகை இயல்பும் இப்பாடலில் புலப்படுத்தப் பெற்றுள்ளன.

(1) ''சிதையா ஞானப் பொருள்'' என்றது சத்தாதல்.
(2) ''கருணை நிறைந்து துளும்பி வழிந்து மறையமுதம் பொழிகின்ற மலர் வாயோய்'' என்றது சித்தாதல்.
(3) ''தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்'' என்றது, ஆனந்தமாதல்.

6. திருவைந்தெழுத்து :

திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாக்கரத்தின் சிறப்பு, வேதாகமங்கள் அனைத்தாலும் விரித்தோதப் படுவதாகும். நமசிவாய அல்லது சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தில், சிகரம் சிவத்தையும், வகரம் திருவருளையும், யகரம் ஆன்மா என்னும் உயிரையும், நகரம் திரோதானசத்தி எனப்படும் மறைப்பாற்றலையும், மகரம் பாசம் ஆகிய ஆணவ மலத்தையும் குறிக்கும் எனப் பெரியோர்கள் கூறுவர். இத் திருவைந்தெழுத்துப் பற்றிய குறிப்பும், இப்பாடலில் அமைந்துள்ளது.

1. ''சிதையா ஞானப் பொருள்''-சிகரம், சிவம்.
2. ''மனக் கருங்கற் பாறையும் உட்கசிந்து உருக்கும் வடிவத்தோய்'' - வகரம், திருவருள்.
3. ''உயிர்க்கெல்லாம்'' – யகரம், ஆன்மா.
4. ''களைகண் ஆகி'' - நகரம், திரோதானசத்தி.
5. ''பொய்யனேன்றன் மருள் நிறைந்த மனம்'' - மகரம், பாசம்.

7. சிவஞானபோதம் :

நமது தமிழ்மொழியின்கண் நீதிநூல்களுள் திருக்குறளும், பக்தி நூல்களுள் திருவாசகமும், இலக்கண நூல்களுள் தொல்காப்பியமும் போல, தத்துவ நூல்களுள் தலைசிறந்து நிற்பது சிவஞானபோதம். அது பன்னிரண்டு சூத்திரங்களால் இயன்றது. அவைகள் முறையே பதியுண்மைக்குப் பிரமாணம், பாச உண்மைக்குப் பிரமாணம், பசு உண்மைக்குப் பிரமாணம், பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம், ஆன்மாவின் சிறப்பியல்பு, ஞானத்தினை உணரும் முறைமை, ஆன்மசுத்தி, பாசநீக்கம், சிவப்பேறு, அணைந்தோர் தன்மை என்னும் பன்னிரண்டு பொருள்களை விளக்கும். இத்தகைய சிவஞானபோதம் என்னும் செந்தமிழ்த் தத்துவஞான நூலின் பன்னிரு சூத்திரப் பொருட்நுட்பக் குறிப்பும்கூட, ஒருவாற்றால் இத்திருவருட்பாப் பாடலில் தொகுத்துக் சுட்டப்பெற்றுள்ளது எனலாம். இப்பாடலில்,

8. பன்னிரு சூத்திரங்கள்:

1) ''உயிர்க்கெல்லாம் களைகண்'' என்றதனால் உலகங்களைப் படைத்துக் காத்து ஒடுக்கி உயிர்களுக்கு நலம்புரியும் கடவுளாகிய பதியுண்மையும்; 2) களைகண் ஆகி'' என்றதனால் அவையேயாய்-தானேயாய் - அவையே தானேயாய் நின்று, இறைவனால் இயக்கப் படும் பாச உண்மையும்; 3) ''பொய்யனேன்'' என்றதனால் பசுவுண்மையும், 4) ''மருள் நிறைந்த மனக் கருங்கற் பாறை'' என்றதனால் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி முதலிய ஐந்தவத்தைப்படும் பசுவின் இலக்கணமும்; 5) ''கருணை நிறைந்து அகம்புறமும் துளும்பி வழிந்து'' என்றதனால் முதல்வனின் சிற்சத்தியாகிய கருணை உயிர் களின் உள்ளும் புறம்பும் கலந்து உதவி புரிதலாகிய பாச இலக்கணமும்; 6) ''சிதையா ஞானப் பொருள்'' என்றதனால் பாச ஞானத்தாலும், பசுஞானத்தாலும் உணரப்படாமல் சிவஞானம ஒன்றால் மட்டும் உணரப் பெறும் பதியின் இலக்கணமும்; 7) ''தெருள் நிறைந்த'' என்றதனால் சத்தோடு கூடிச் சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் அழுந்தும் சதசத்தாகிய ஆன்மாவின் சிறப்பிலக் கணமும், 8) "மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்''என்றதனால் ஞானத்தை யுணரும் முறைமையும், 9) ''கண்ணுடையோய்'' என்ற தனால், ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணிற் சிந்தை நாடுதலாகிய ஆன்மசுத்தியும்; 10) ''வளர்க்கின்ற'' என்ற தனால் அவனேதானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்க மலமாயை தன்னொடும் வல்வினை தீர்தல் ஆகிய பாச நீக்கமும்; 11) "இன்ப நிலை'' என்றதனால் காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற் காண உள்ளத்தைக் கண்டு காட்டப் பெறுதலாகிய சிவப்பேறும்; 12) ''உட்கசிந்து உருக்கும் வடிவத்தோயே'' என்ற தனால், சீவன்முத்தர் இயல்பாகிய அணைந்தோர் தன்மையும் சுட்டப் பெற்றிருத்தல் காணலாம்.

9. முடிவுரை:

இன்னோரன்ன பலப்பல நுண்ணிய பொருள்களையெல்லாம், தன்னகத்தே பொதிந்து கொண்டு தலைசிறந்து விளங்கும் இப்பாடலைப் போன்ற, எத்தனையோ பல தெய்வீக நலப் பாடல்களையுடைய, இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாப் பாடல்களை, நாம் இடையறாது ஓதி ஓதி, இறையருள் பெற்று உய்ய முயல்வோமாக!

# திருமூலர் திருமந்திரம்

சொ. சொ. மீ. சுந்தரம், எம். காம்.,

ஞானக்கொழுந்து

அருள்வடிவான ஆண்டவன் தனக்கெனப் பெயரும் வடிவும் அற்றவன். நினைப்பவர் நினைத்த வடிவில் காட்சியளிப்பவன். இல்லாததை நினைக்க முடியாது. உருவத்தை நினைத்து வழிபட்டால், பிறகு அருவத்திலும் ஆண்டவனை உணரலாம். தூலத்தைக் கொண்டு சூக்குமத்தை உணர்வது அறிவு நெறி. மணம் என்றால் என்னவென்று எவ்வளவு பேசினாலும் தெரியாது. மல்லிகைப் பூவைக் கொண்டுவந்து முகர்ந்து பார்க்கச் சொன்னால் மணம் என்பதை எளிதில் உணர்த்தலாம். அன்புக்கு இரங்கும் ஆண்டவன் ஆயிரம் வடிவம் எடுக்கிறான். ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாதவன் நாம் பாடும் ஆயிரம் திருநாமங்களில் அருள் வடிவைக் காட்டுகிறான்; இத்தகைய தெய்வ வடிவங்களில் ஓங்காரத் தத்துவம் விநாயகப் பெருமான். பூதி என்றால் செல்வம். விபூதி என்றால் ஒப்பற்ற செல்வம். அதுபோல நாயகன் என்றால் தலைவன்: விநாயகன் என்றால் ஈடிணையற்ற தலைவன். திருமந்திர நூலின் காப்புப் பாடல் விநாயகப் பெருமானை ஞானக்கொழுந்தாகக் காட்டுகிறது. செடி, மரம் முதலியவற்றின் வளர்ச்சியில் கொழுந்து தொடங்கி இலையாக மாறிப் பிறகு பூத்துக் காய்த்துக் கனி கொடுப்பதைக் காண்கிறோம். ஞான வளர்ச்சியில் முதல் படியில் இருந்து ''மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக் காலால் எழுப்பும் கருத்தறிவிப்பவர்'' விநாயகப் பெருமான். எனவே அவர் ஞானக் கொழுந்தாகிறார். ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைச் செய்யும் சிவபெருமான் திருக்குமரர் ஆகி, சிவபெருமானுக்குச் சமமான பேராற்றல் பெற்ற விநாயகர், ஐந்தொழில் செய்ய ஐந்துகரம் பெற்றார். பிரணவப் பொருள் அறியாமல் படைத்த நான்முகன் முருகப் பெருமானிடம் குட்டுப் பட்டான். பிரணவ வடிவான விநாயகர் அந்த ஓங்காரத்தைக் காட்ட யானை முகம் பெற்றார். எனவே இவருக்குமுன் அடியார்

கள் தம்தலையில் சூட்டிக் கொள்ளத் தொடங்கினர். இளம் பிறைச் சந்திரன் போன்ற ஒற்றைத் தந்தம் பெற்றார் விநாயகர். ஞான அமுது சுரக்கு மிடம் உடம்பில் புருவ நடுப் பகுதி. அது சந்திர மண்டலம் என்பர். அதைக் காட்டச் சந்திரன் போன்ற கொம்பைப் பெற்றார் விநாயகர். முது பிறை யினும் இளம் பிறை போற்றத் தக்கது. சிவபெருமான் திருமுடி யில் அமர்ந்தது இளம்பிறை தானே!

நந்தி என்பது சிவபெருமான் திருப் பெயரில் ஒன்று. இயல் பாகவே பாசங்களினின்றும் நீங்கிய பெருமான், நம்மையும் பாசத் தளை பற்றாமல் காக்கிறான். அந்த நந்தியின் மகனாக விநாயகப் பெருமான் .ஞானக் கொழுந் தாகக் காட்சியளிக்கிறார். அந்தப் பெருமானை நம் (புத்தியில்) அறிவில் வைத்து வழிபடுவோம் என்கிறார் திருமூலர்.

ஐந்து கரத்தினை, ஆனை
முகத்தினை,
இந்தின் இளம்புறை போலும்
எயிற்றனை,
நந்தி மகன்தனை, ஞானக்
கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி
போற்றுகின் றேனே.

என்பது காப்புச் செய்யுள்; அஞ்செழுத்து வடிவான ஆண்டவன் அருளை விளக்கும் நூல் ''ஐந்து'' என்ற சொல்லோடு தொடங்கும் காப்புச் செய்யுளைப் பெற்றது சிறப்பு. விநாயகர் தன்மைகளாக, ஐந்து கரத்தன், ஆனை முகத்தன், இந்தின் இளம் பிறை போலும் எயிற்றன், நந்தி மகன், ஞானக் கொழுந்து, என்ற தன்மைகளைக் காட்டுவது மேலும் சிறப்பு; அரசமரத்தடிக் காற்று அறிவுத் தெளிவை உண்டாக்கும். அதனாலேயே அந்த மரம் "அரச'' மரமாயிற்று. விநாயகர் அரச மரத்தடியில் அமர்ந்து ஞானம் தருகிறார். திருமூலரும் திருவா வடுதுறையில் அரச மரத்தின் கீழ் அமர்ந்து திருமந்திரம் உரைத்தார்.

இந்தக் காப்புச் செய்யுள் திருமூலரால் பாடப் பெற்ற தன்று எனுங் கருத்தும் அறிஞர் பெருமக்களுக்கு உண்டு; சேக்கிழார் சுவாமிகள் ''ஒன்றவன்தானே'' எனத் தொடங்கும் திருமந்திரம் என்று குறிப்பிடுவதாலும், திருமந்திரத் தில் வேறிடங்களில் விநாயகர் சிறப்புக்கள் பாடப் படாமை யானும், விநாயகர் வழிபாடு தமிழ் மண்ணில் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் வந்ததாலும், அதற்குமுன் வாழ்ந்த திருமூலர் விநாயகரைப் பாடவாய்ப் பில்லாமை பெறப்படுகிறது;

யாரால் பாடப்பட்டாலும் திருமந்திர நூலுக்கு (விநாயகர்) காப்புச் செய்யுளாக இருக்கும் தகுதி மிகுதியும் பெற்றது இப் பாடல் என்பதை யாரும் மறுக்க முடியாது.

உபதேசம் - மந்திரம் - தந்திரம்

உலகம் உய்ய வேதங்களும் ஆகமங்களும் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டன. வேதம் பசு; அதன்பால் மெய் ஆகமம். வேதம் பொது. ஆகமம் சிறப்பு. அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை உணர்த்தி உலகின் இயற்கையைக் காட்டி வீடுபெறும் வழியில் யாவரையும் நிற்க வைப்பது வேதம். சிவ தருமங்களைப் புகட்டி வீட்டையே பெறச்செய்வது ஆகமம்.

சிவாகமங்கள் மூன்று உறுப்புக் களைப் பெற்றவை. அவை உபதேசம் மந்திரம் தந்திரம் எனப்படும். கேட்கும் பக்குவம் உடையவனுக்குச் சொல்லும் பக்குவம் உடையவன், சிவ ஞானத்தைப் போதிப்பது உபதேசம். நினைப்பவனைக் காப்பது மந்திரம். சாத்திரங்களை முன்னொடு பின் மலைவறக் கொள்ளுதல் தந்திரம்.

அனாதியே அமலன் ஆய
அறிவன்நூல் ஆகமந்தான்;
பினாதிமா றின்றிப்பேணல்
தந்திரம்; மந்திரந்தான்
மனாதிகள் அடக்கித் தெய்வம்
வழிபடும் வாய்மையாகும்;
தனாதியீ றிலான்தன் தன்மை
உணர்த்துதல் உபதே
சந்தான்;

என்பது சிவஞான சித்தியார்.

சிவாகமங்களைத் தெரிவிக்கும் திருமந்திரத்தில் உபதேசப் பகுதி முதலில் வர, அதைத் தொடர்ந்து, ஒன்பது தந்திரங் கள் வர இவற்றிற்கிடையில் மந்திரங்கள் வருகின்றன. இம் மூன்றுக்கும் முன்னால் பாயிரம் அமைகிறது.

ஆயிர முகத்தான் அமைந்த
தாயினும்
பாயிர மல்லது பனுவல் அன்றே

என்றபடி, திருமந்திரச்சிறப்புப் பாயிரம் அமைந்து,

கடவுள் வாழ்த்து, வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு குரு பரம்பரை, திருமூலர் வரலாறு, அவையடக்கம், திருமந்திரத் தொகைச் சிறப்பு குருமட வரலாறு, திரிமூர்த்திகளின் இயல்பு ஆகியவற்றைப் பேசு கிறது.

கடவுள் வாழ்த்து

ஒன்றவன் தானே!

---

''ஓமெழுத்தில் அன்பு மிகவூறி
ஓவியத்தில் அந்தம் அருள்
வாயே''

என்று திருப்புகழ் குறிப்பிடும் ஓங்கார வடிவாகத் திருமந்திர

நூல் ''ஒன்றவன் தானே'' எனத் தொடங்குகிறது உள்ளது.ஒன்று; அது பலவாகத் தோன்றுகிறது. தன் அருளான பராசக்தியோடு கூடிப் பரம்பொருள் இரண்டா கிறது. கதிரும் கதிரவனும் இயல் பில் ஒன்றுதான். ஆனல் இரண் டாகத் தெரிகிறது. ஒரு பொரு ளான சிவன் இனிமையான சக்தியோடும் இரண்டாகிறன். இப்பெருமான் அரன், அரி, அயன் என்ற மூன்றிலும் நிற்கிறன். பதி, பசு, பாசம் மூன்றிலும் நிற் கிறன். அன்பு, அறிவு, ஆற்றல் மூன்றிலும் பொலிகிறன். அவன் அவள், அது எனச் சுட்டப்படு கிறன் மனம், வாக்குக் காயங் களால் உணரப்பட்டு மூன்றிலும் நிற்கிறன்.

இப்பெருமான் நான்கு உணர்ந் தான் என்கிறர் திருமூலர். நான்கு வேதங்களை உணர்ந்தான் என்றும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறப் படும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு ஆகியவற்றல் உணரப் பட்டான் என்றும்கொள்ளலாம். மனிதன் நிலைகளில் நனவு, கனவு, சுழுத்தி, துரியம் என்ற நான்கு நிலைகளில், நாலாவது நிலையான துரியத்தில் உணரப்பட்டான் என்பதும் பொருந்தும் நனவிலும் கனவிலும், ஆழ்ந்த உறக்கமான சுழுத்தியிலும் காண முடியாத இறைவன் துரியநிலையில் அகப் படுகிறன். மனம் புத்தியில் ஒடுங்கி புத்தி இயக்கத்தில் அடங்கி, இயக்கம் இதயத்தை நிறைத்து, இதயம் இறையுணர்வில் அடங் குவது துரியநிலை. அதையே 'நான்குணர்ந்தான்' என்கிறேம்.

நான்குணர்ந்தபெருமான் ஐந்து வென்றனன். இதை மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தை யும் வென்றன் என்று கொள்ள லாம். இயல்பாகவே இவற்றுக்கு அப்பாற்பட்டவன் இறைவன். பொறிவாயில் ஐந்தவித்தான் என்று போற்றப்பட்டவன் ஆண் டவன். இந்தப் பொறிகளை மட்டு மன்றி, பூதங்கள் எனப்படும் வான், மண், வளி, ஒளி, நீர் எனும் ஐந்தையும் வென்று (உட லுக்கு இறைவன் ஆகாமல்) உயிருக்கு இறைவன் (ஆன்ம நாதன்) ஆகியவன் பெருமான்.

இப்பெருமான் உயிர்களுக்கு அருள ஆறய் விரிந்தான். ஆறு தாங்கிய சடையுடைப் பரமன் நெஞ்சிலே பக்தி ஆறக் விரிந் தான். ஓரறிவுயிர் முதல் ஆறறிவு உயிர் வரை ஆறக விரிந்தான். சமயங்கள் ஆறகவும் அவனே விரிந்திருக்கிறன். இறைவனை நம்பும் அகச்சமயங்கள் [பேத வாத சைவம், பாஷாண வாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம் ஈசுவர விகார வாத சைவம், சிவாத்துவித சைவம்] ஆகிய ஆறகவும் அகப்புறச் சமயங்கள் [பாசுபதம், மாவிரதம், காபா லிகம், வாமம், வைரவம்,

ஐக்கியவாதம் ஆகிய] ஆருகவும், இறைவனே விரிந்திருக்கிருன். இறைவனை நம்பாமல் இயற்கையை நம்பும் புறச் சமயங்கள் [தருக்கம், மீமாம்சை, ஏகான்மவாதம், சாங்கியம் யோகம், பாஞ்சராத்ரம் ஆகிய] ஆருகவும், புறப்புறச் சமயங்கள் [உலகாயதம், சூனியவாத பெளத்தம், யோகாசார பெளத்தம், செளத்திராந்திக பெளத்தம், வைபாடிக பெளத்தம், ஆருகம் ஆகிய) ஆருகவும் இறைவன் விரிந்தான். கடவுள் வணக்கம் செய்யும் முறைக்கேற்ப, சைவம் வைணவம், சாக்தம். காணு பத்தியம் கெளமாரம், செளரம் என்ற ஆறு சமயங்களாக விரிந் தான். ஆறு ஆதாரங்களாகவும் விரிந்தான்.

இப்படி ஆருய் விரிந்தவன் ஏழும்பர்ச் சென்ருன். உம்பர் என்ருல் மேல்நிலையில் உள்ள உணர்வுகள். உடல், உயிர் மனம், விஞ்ஞானம், ஆனந்தம், சித்து, சத்து ஆகிய ஏழுநிலைகளி லும் ஆன்மாவைச் செலுத்திப் பக்குவமாக்கித் தன்னுடன் இரண்டறக் கலக்கச் செய்கிருன் இந்த ஏழு நிலைகளும் உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் என்பன வாக அமைந்துள்ளன. மலங் கழிக்கும் எருவாய்க்கும் கரு வாய்க்கும் இடையில் உள்ளது மூலாதாரம்; கருவாய் சுவாதிட் டானம்: மண்ணீரல் (தொப்பூழ்) மணிபூரகம்; இதயம் அனுகதம் தொண்டை விசுத்தி; புருவநடு ஆக்ஞை; சகஸ்ராரம் சிரசுக்கு மேலுள்ள பகுதி. சிவபெருமான் இந்த ஏழிலும் இருக்கிருன், [ஞாயிறு திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி. என்னும் ஏழண்டங்களிலும் இருந்து, அவற்றைக் கடந்தும் காட்சியளிக்கிருன் என்பதும் பொருந்தும்.]

மேற்கண்ட ஏழையும் தாண்டி சகஸ்ராரத்துக்கு அப்பால் உள்ளது. ''துரியங்கடந்த பரநாத மூலத்தலம்.'' இதை இராப் பகலற்ற நிலே என்றும் சிற்பரம் கடந்த தற்பர நிலே என்றும் குறிப்பர். இறைவன் நிலம், நீர், தீ, காற்று, விண், கதிரோன், சந்திரன், ஆன்மா ஆகிய அட்ட மூர்த்தியாகி இருக்கிருன்;

நிலம், நீர், நெருப்பு, உயிர்
நீள்விசும்பு, நிலா, பகலோன்,
புலனுய மைந்தனேடுஎண்வகை
யாய்ப் புணர்ந்து நின்ருன்
உலகேழெனத்திசை பத்தெனத்
தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோள்
நோக்கம் ஆடாமோ!

என்பது திருவாசகம். எண்ணலங் கராப் பாடலாகிய இக்கடவுள் வாழ்த்துப் பாடல் எண்ணற்கரிய இறைவனே எண்ணச் செய்கிறது. எட்டமுடியாத இறைவனே

ஒன்றில் தொடங்கி, எட்டில் உணர்த்துகிறது:

ஒன்றவன் தானே;
இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்;
நான்குணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு
விரிந்தனன்; ஏழும்பர்ச்
சென்றனன் தான் இருந்தான்
உணர்ந்து எட்டே. (1)

என்பது இப்பாடல்.

(வளரும்)

# நூல் நிறை

## வாகட அகராதி

[ஆசிரியர் பெயர்: தெரியவில்லை; பதிப்பும் கிடைக்குமிடமும்: மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம் திருவான்மியூர். சென்னை 600041; பக்கங்கள் : 12+54; விலை ரூ. 5/-]

வேதத்திலிருந்து தோன்றிய அற்புதக் கலைகளுள் மருத்துவக் கலையும் ஒன்று. ஆயுர்வேதம், சித்தமருத்துவம் எனப் பெயரளவிலும், சிறிதளவு செயலளவிலும் வேறுபட்டிருப்பினும் பயனளவில் அவை மிகச் சிறந்தவை; ஆனால் அக்கலைகளைப் பற்றி எழுதிவைத்த மகானுபாவர்களும், செயல்புரித்த மருத்துவர்களும் மற்றவர்களுக்கு இக்கலை நுணுக்கம் புரியக் கூடாது என்ற பெருங்கருணைத் திறத்திலேயே மூலிகைகள், செய்ம் முறைகள் ஆகியவற்றுக்கு அதிசூட்சம வார்த்தைகளைக் கையாண்டார்கள். இல்லாததில்லையெனும் பெருமை பெற்ற பாரத பூமியில் பிறநாட்டு மருத்துவங்கள் நுழைந்தமைக்கும், இம்மருத்துவங்களே வேறு முத்திரையில் இங்கே செல்வாக்குப் பெற்றமைக்கும் இதுவே காரணமாகும்.

இந்தக் குறை 'வாகட அகராதி' வெளிவந்துவிட்டதால் இருக்காது என்றே கூறலாம். வாகடம் - மருத்துவம். மருத்துவ நூல்களின் கடமுடாச் சொற்களுக்கு இந்நூல் மெய்ப்பொருள் - செம்பொருள் கூறுகிறது.

ஷி நூலக ஆய்வாளரும் இந்நூலின் பதிப்பாசிரியருமாகிய திரு. பால சாரநாதன் அவர்கள் மருத்துவத்துறையின் வரலாற்றையும், இந்நூலின் பயனையும் மிக அற்புதமாக விளக்கி முன்னுரையில் எழுதியுள்ளார்.

உ-ம்: கம்மம் - சடமேம் (பக்-13) கம்மமும் புரியாது, சடமேம்-உம் புரியாதவர்களுக்கு இந்த நூல் பயன்படாது;

தொகுத்தவர் மருத்துவராக இருக்க வேண்டும். இக்கால மருத்துவர்களுக்கும் புரியுமாறு இக்காலத்திற்கேற்ற - தெரிந்தவரை- விளக்கங்கள் சேர்த்த பதிப்புக்கள் மேலும் மேலும் வரும் என்று எதிர்பார்ப்போம்.

எவ்வாறாயினும் 'இருட்டறையில் கிடைத்த சுடர் விளக்கே இந்நூல்' என்பதில் ஐயமில்லை!

உ. வே. சா. நூலகப் பதிப்புத் துறையின் பெரும் சாதனைகளுள் இப்பதிப்பும் ஒன்று.

## சோழர் வரலாற்றுச் சுருக்கம்

குடந்தைக்கருகில் உள்ள தாராசுரத்தில் மே 8 - 9 ஆம் தேதி களில் நடைபெற்ற இராஜகம்பீரன் பெருவிழாவை ஒட்டி வெளியிடப் பெற்ற சிறப்பு மலர். குடந்தை ஈங்ஸ் கிளப் தலைவி லலிதாசேதுராமன் அவர்கள் மலரை அறிமுகம் செய்ய, தருமையாதீன கர்த்தகர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்கள் வெளியிட்டருளினார்கள். இதன் ஆசிரியர் குடந்தை ராமன் & ராமன் இயக்குநர் திரு. என். சேது ராமன் ஆவார். அளவாற் சிறிதாயினும் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய இம் மலரை இலவசமாக வழங்கும் ஈங்ஸ் கிளப் மாதர் சங்கத்தினர் பாராட்டற்குரியவராவர். தலைவி, ஈங்ஸ் கிளப், ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் என்ற முகவரிக்கு எழுதி இலவசமாகப் பெறலாம்;

## 'APPAR'

By Thiru G. Vanmikanathan, published by the Sahitya Academy under the series "Makers of Indian Literature"-83 pages, Demy size, price Rs. 4/—]

The author is a Retired Deputy Secretary of the Central Govt. and has to his credit the following books published in the same series, namely Manickavaasagar and Ramalingar. His English translation of Thiruvasakam has been published by the Kasi mutt. (Price Rs./15=).

The book under review is mainly intended for non-tamil readers and it deals in a lucid and concise manner the life and work of Marulneekkiyar, more popularly known as "Thirunaavukkarasar", name conferred by Lord Siva in appreciation of his fluent devotional songs and Appar as affection ately hailed by the child Saint Thirugnanasambandar. The book contains nineteen chapters and mostly conforms to St. Seikkizhar's version in Periapuranam. The message of Appar namely fearlessness, faith, humility, service, non-attachment to worldly things, and voluntary poverty etc., have all been well expatiated with profuse and extensive quotations from Thirumurais and other religious literature.

The learned author as is his wont, has observed as follows:

> "I cannot but come to the conclusion
> that the opinion held in Tamil Nadu
> for the last thirteen centuries that
> Appar was an apostate is a most vile
> columny"

In support of his above observation he has given his able and masterly pleadings and this is a fit subject for further research and comments. The reviewer leaves it to eminent scholars to deal.

M. MAIKANDADEVAN
TIRUPANADAI.

# சங்கற்பநிராகரணம்

உரையும் விளக்கமும்

கு. சுந்தரமூர்த்தி M. A. திருப்பனந்தாள்.

வேதம் முதல்வனால் கூறப்பட்டதாயின் தனக்குக்கீழ்ப்பட்ட தெய்வங்களை வணங்கிக்கூறிய சொற்கள் வேதத்துள் காணப்படுவானேன் எனில், அரசனுடையகுடிகள் அரசனைக்கண்டு தம்குறைகளைச் சொல்லிக்கொள்வதில்லை; மாறாக அவன்கீழ்ப்பணியாற்றும் அமைச்சர் முதலியோர்களைக் கண்டு தம் வணக்க உரைகளைக்கூறித் தம்குறையைக் கூறுவார்கள். அவர்களும் அக்குறையை நீக்குவர். அதுபோன்றே நாமும் நம்குறைகளை நீக்குதற்கு இறைவனின் ஆணைவழிச்செயற்படும் தெய்வங்களை நோக்கி வழுத்துதற்காக அவ்வாறான உரைகள் அதில் அமைந்துள்ளன. இதுவன்றி இறைவன் பிறரை வணங்குதல் என்பது கனவிலும் இல்லை.

இறைவன் தன்னைத்தான் துதித்தில் எவ்வாறமையுமெனில் பக்குவமுடைவர்கள் தன்னை வழிபட்டு உய்தற்குரிய முறையைக்காட்டுதற்காகும். இதுவன்றி முதல்வன் தன்னுடைய பெருமைகளைத்தனக்காகச் சொல்லிக்கொள்வதில்லை. உடல் அறிவற்றதாதலின் அதனை நோக்கியும் சொல்லான். எனவே உய்தி பெறுதற்குரிய உயிர்களை நோக்கியே அவ்வாறு கூறினனென்பது பெறுதும். அவ்வாறாகவே நூலாகிய அளவை, முதல்வனாகிய அறியப்படும் பொருள், உயிராகிய அறிபொருள், உயிர் அறிவாகிய கருவி எனப்பொருள் நான்காதல் பெறப்படும். அவ்வாறு பெறப்படவே நீ பொருள் ஒன்று என்றது பொருந்துமாறில்லை. நல்ல அளவைநூலாய வெதம் ஒன்று தான் உள்ளது என்பதும் பொருந்துமாறில்லை. அவ்வளவையால் உணர்த்தப்படும் முதல்வன் ஒருவனேஉளன் என்பதும் பொருந்துமாறில்லை.

கரும்பில் உண்டாயசுவை தன்னில் வேறுபாடில்லாதது கொண்டு தன்னுடை சுவையைத் தான் உணராததுபோலும் பிரமமும் தன்னுடைய இன்பத்தைத் தானறியாது என்றாய். கரும்பில் உண்டாய கட்டியை அதனின்றும பிரித்துவைத்தாலும் அதனொடு கூட்டிவைத்தாலும் கரும்பு பெறுவதும் இழப்பதும் ஒன்றில்லை. அத்தகைய அறிவற்ற உவமைய்ய அறிவுடைய பிரமத்திற்குக் கூறல் பொருந்துவதன்றாம்.

மேலாய பிரமப்பொருள் உடல் உலகு முதலியவாக விரிந்த தன்மை பொன் பலஅணிகளாய் விரிந்த தன்மை

போலும் என்று கூறின், இவ்வுலகில் செய்வோர் ஒருவரின்றிச் செய்தொழில் எதுவும் காணப்படுவதில்லை. ஆதலின் பொன் பல பணிகளாக ஆயதும் செய்வோர் ஒருவரின்றித் தானே ஆதலில்லை. அந்நிலையில் பிரமம் உலகாகவிரிந்ததும் பிறனொருவனின் செயலாதல் வேண்டும். அற்றன்று, எல்லாவற்றையும் செய்தது பிரமம் எனில். இவ்வுலகில் செய்பவர்களைப்போல அவர்களால் செய்யப்படும் பொருள் இருப்பதில்லை. அது குயவனைப்போல அவன்செய்யும் கலங்கள் இலவாதல் கொண்டு தெளியலாம். ஆதலின் இப்பிரமமல்லாது உலகின்தோற்றத்திற்கு வேறொரு காரணம் உளதாதல் வேண்டும்.

உலகத்தோற்றத்திற்குப் பிரமமன்றிப் பிறிதொரு முதற்காரணம் உளதொகுமேல் அதுவே அமையும்; பிரமம் வேண்டுவதில்லையே எனில், செய்வோரின்றிச் செய் பொருளில்லை என்னும் உண்மைக்கு அதுமாறாகும். சிப்பி வெள்ளியாகத் தோன்றுவதுபோல, உலகம் தோற்றம் மாத்திரம் உடையதெனின், அறிவுடைய பிரமம் அறிவற்ற உலகைத் தோற்றுவியாது. தோற்றுவிக்குமெனில் இவ்வுலகு பொய்த்தோற்றம் என்றல் ஆராயாது கூறியதாதல் வேண்டும். அன்றியும் பிரமமே உலகமாயிற்று எனநீகூறும் பொருள் முறையை மறந்தாய் ஆதலும் வேண்டும்.

பிரமமும், உலகு உடல் முதலியவாயநிலையில் உலகம் உள்பொருளே. பிரமம் தன்னைப்பிரமம் என்றறிந்த நிலையில் உலகம் இல்பொருளே எனில் இவ்உலகு மேலாய பிரமத்திருந்து உண்டானதாயின் அப்பிரமம் போன்றே அதுவும் அழிவற்ற பொருளாதல் வேண்டும். அன்றெனில் இவ்வுலகம் பிரமத்தினின்றும் தோன்றியது என்னும் கொள்கையை விட்டு விடவேண்டும். அவ்வாறு விட்டு விடின் உலகம் எதிலிருந்து தோன்றியது? என்பதற்கு நீ விடைகூறவும் வேண்டும்.

அன்றியும், எல்லா வேதனைகளினின்றும் நீங்கிய மேலாய பொருள் பிரமம் ஆகும். அதுவே் நானெனில் அது அறிவாயிருப்பது. ஆராய்ந்து பார்க்குமிடத்து நீயோ மலப்பிணிப்புண்டு அதனால் துன்பத்தையும் அறியாமையும் உடையவனாய் விளங்குகின்றாய். அன்றியும் அது அறிவாய் இருத்தற்கும், நீ அறியாமலிருத்தற்கும் காரணம் கூறவேண்டும், நீயும் பிரமமும் ஒன்றாயிருத்தலின் பிரமமும் அறிவற்றது என்று கூறின் பிரமம் அறிவுடைதென்னுமுறையுரையை நீ கைவிட்டயாதல் வேண்டும். காட்சி கருதல் உரை ஆகிய மூன்றனும் நீ அறிதல்போலப் பிரமமும் அவற்றாலறிதல் வேண்டும், அது

அவ்வாறறியுமெனில் மாற்றம் மனம்கழிய நின்ற பிரமம் என்பது எங்ஙனம் பொருந்தும்.

பொன் பல அணிகளாகும்போது அவற்றில் பொன்னின் மாற்று ஒருபடித்தாக இருக்கும் ஆனல் அறிவுடைய பிரமத்திலிருந்து அறிவற்ற உலகு தோன்றியது எங்ஙனமெனில் அறிவுடைய சிலந்திப் பூச்சியிலிருந்து அறிவற்ற நூல் தோன்றுவது போல்வதென்றாய்: நீ கூறும் சிலந்தி நூலைத் தோற்றிவைத்துக்கொண்டு நிற்பதன்றி அதனைத் தன்னுள் ஒடுக்குவதன்று. ஆனல் பிரமமோ, உலகைத் தன்னுள் ஒடுக்கவும் செய்யும். ஆதலின் சிலந்தி உவமையன்றாம். சிலந்தியிடத்துத் தோன்றியநூல் ஒரு தன்மையதாகப், பிரமத்திலிருந்து தோன்றிய உலகம் பலதன்மைத்தாக இருத்தல் எங்ஙனம்? என நான் முன் கேட்டபொழுது, ஒருமரத்தில் தோன்றிய பூ, இலை, காய், பழம் ஆகியன வேவ்வேறியல்பினவாதலும், நீரில் காணும் திவலை, நுரை, திரை, குமிழி ஆகியன வெவ்வேறு வடிவினவாதலும் போல்வது என்றாய். மேற்கூறிய இரண்டும் அறிவற்றன. ஆதலின் அறிவற்றனவாய பலதோன்றின. அதனல் அவை அறிவுடைய பிரமத்திலிருந்து தோன்றிய தொன்றற்குக் காட்டாகா. அறிவாய் உள்ள தொன்று அறியாமையாய் விரியும் என்றும், அறிவினிடத்து அறியாமையினது கூட்டங்கள் தோன்றும் என்றும் நீ கூறிய மலைவுகள் ஏனைய எவரும் கூறுர். அங்ஙமாக இவ்வுலகம் தோன்றியதெங்ஙனமெனில், நுண்ணியதாய விதையிலிருந்து இலையும், பழமும் விழுதும் மிகவுடைய ஆலமரம் தோன்றியது போல, பருப்பொருளாகக் காணும் இவ்வலகும் நுண்ணியதாயும் அறிவற்றதாயும் உள்ள ஒரு முதற்பொருளிலிருந்து விரிந்ததாதல் வேண்டும். நெல்லிலிருந்து வைக்கோலும் பதரும் தோன்றினாற்போல அறிவுடைய பொருளினின்றும் அறிவற்ற உலகம் தோன்றுமெனில் அதுவும் பொருந்தாது. இங்குக்கூறிய உவமையில் நெல்லும் அறிவற்றது, அதில் தோன்றிய வைக்கோல், பதர்களும் அறிவற்றன. ஆனல் பிரமமோ அறிவுடையது. அதில் தோன்றிய உலகோ அறிவற்றது இவ்வகையில் இதற்கு அது உவமையாகாது. ஒன்றிலிந்து ஒன்று தோன்ற வேண்டுமேல் காரணகாரியம் இரண்டும் ஒத்திருத்தல் வேண்டும். இம்முறைநில இன்றேல் பருத்தியிலிருந்து புடவை உண்டாவதன்றி மண்ணிலிருந்தும் புடவை உண்டாதல் வேண்டும் அவ்வாறுதல் கூடுமோ! கூடாது.

எல்லையற்ற பிரமப்பொருளிலிருந்து அறிவற்றதும் அழிவுடையதுமாய உலகுதோன்றற்கு அவித்தைகாரணமெனில், அறிவுடைய

பிரமம் அறிவற்ற அவித்தையொடு கூடுதற்குக் காரணம் வேண்டும். அவித்தையொடுகூடி உலகைத் தோற்றுவிப்பதே பிரமத்தினியல்பு எனில், நெருப்பிற்கு வெப்பம் இயல்பானாற்போல அறிவுடைய பிரமத்திலிருந்து தோன்றிய உலகும் அறிவுடையதாய் இருத்தலே இயல்பாகும். உலகு அறிவற்றதென்பதை ஏற்பின் பிரமத்தின் இயல்பு இவ்வுலகு என்ற வழக்கை விடுவாயாக. அறிவுடைய பிரமத்திற்கு அறிவற்ற உலகம் இயல்பென்பது விளக்கு ஒளிக்கு இருளைப் பொதிந்து கொண்டு நிற்பது இயல்பென்பதையொக்கும். பெரியவிளக்கிடத்து உண்டாகிய ஒளிகருத்தமையைத் தருதல்போல பிரமம் இவ்வுலகைத் தந்ததெனில், விளக்கிடத்துத்தோன்றும் மை அதன் ஒளியில் தோன்றுவதுமில்லை; ஒடுங்குவதுமில்லை. ஆனால் நீ கூறுவதோ பிரமத்தில் இருந்து உலகு தோன்றும்; மீண்டும் அதன்கண் ஒடுங்கும் என்பதாம். ஆதலின் அவ்வுமையும் பொருந்துவதன்றாம். அன்றியும் தூயதாக விளங்கும் பிரமம் தூய்மையற்ற அவித்தையைக் கூடக்காரணம் வேண்டும் பிரமம் இருந்தபடி இருக்க ஒருகால எல்லையில் மாயையின் விளைவாய அவித்தை கூடியதெனில், அவ்வாறு அது கூடியதற்குக் காரணம் என்ன? விண்ணில் மேகங்கள் சூழ்தல் இயற்கையாதல் போல இதுவும் இயற்கையாம்எனில், வீடுபேறு என்றஒன்று பேசவேண்டுவதில்லை. காரணம் மாயைமுதலிய மலங்களின் செயலறப் பிரமத்தைக் கூடியவர்களே வீடுபேறடைந்தவர்களாவார். ஒருகாரணமுமின்றிப் பிரமத்தையே அவித்தைகூடுமாயின்வீடுபேறடைந்த மேற்கூறியஉயர்நிலை உற்றோரிடத்தும் அதுபொருந்துவது இயல்பாகிவிடும்.

மயக்கம் விளைவிக்கத்தக்க அவித்தை பிரமத்தோடு பொருந்தியது பிரமத்துக்கு விளையாட்டாய் இருப்பது ஒன்றுஎனில், விளையாடுவோருக்கு விளையாடுவதற்குரிய பொருள் வேறாதற்போலப் பிரமமும் உலகும் வேறுதல் தக்கதாம். அவ்வாறாயின் பிரமத்திலிருந்து உலகு தோன்றியது என்னும் கொள்கையை நீ மறந்தாயாதல் வேண்டும். அல்லது சிலந்தி தன்னிடத்தினின்றும் தோன்றிய நுண்ணிய நூலால் தனக்குக் கூடாகப்பண்ணித் தானதற்குள்புகுந்து பின் அதனின்றும் வெளிப்பட இயலாது இறந்த தன்மைபோல, அப்பிரமமும், மாயையின் விளைவாக உடலுக்குள் விளையாட்டாக வந்து புகுந்து பின் வெளிப்பட இயலாது தனக்குரிய முழுமுதல் தன்மையையும் முற்றறிவையும் இழந்தது என்றுகூறல் வேண்டும். அவ்வாறாயின் அத்தகைய மாயையின் விளைவினின்றும் விடுத்து எடுத்து ஆட்கொள்ளும் வேறோர் முதல்வன் வேண்டப்படும், அந்நிலையில் நீ கூறும் பிரமம் பிரமம் ஆகாது.

ஒளியோடு கூடிஇருக்கும் செம்பானது குளிகையோடு கூடிய விடத்துக் களிம்பு நீங்கித் தூய்தாம் தன்மைபோல் அப்பிரமத்திற்கு உண்டாகிய உடல்தொடர்பை அதனிடத்தில் தோன்றிய சிறந்த பேரறிவு நீக்க அப்பிரமம் தூயதாம் எனில், முன் தூயதல்லாத பிரமத்தை அழிவற்றவனென்றும், முற்றுமுணர்ந்தவனென்றும், வினையினீங்கியோனென்றும் நீ கூறிய சதுரப்பாடு என்னும்? செம்பிலிருந்து களிம்பை நீக்கிய குளிகை வேறுதல் போல, பிரமத்தின் உடல் தொடர்பை நீக்கிய சிறந்த அறிவும் அதனின் வேறுதல் வேண்டும். அச்சிறந்த அறிவே பிரமம் எனில் அதனின்றும் நீங்கிய பிரமம் தளையோடு கட்டுண்டுநிற்கும் எம்மில் ஒருவனாதல் வேண்டும். அங்ஙமையாயின் நீ சைவச்சார்புடையனாதல் வேண்டும்.

மணிகள் பலவாய் இருக்கினும் அதில் கோக்கப்பட்டநூல் ஒரு தன்மையாய் இருந்தது போலவும், பசுக்கள் பலநிறப்பட்டனவாய் இருப்பினும் அவற்றில் உண்டானபால் ஒருதன்மையாய் இருந்தது போலவும், நீருடைய கலங்கள் பலஇருப்பினும் அவற்றில் காணப்படும் கதிரவனின்கதிர் ஒருதன்மையாய் இருந்தது போலவும், கூவல், குளம், குழி, முதலிய நீர்நிலைகள் பல இருப்பினும் அவற்றிலுண்டாய நீர் ஒருதன்மையாய் இருந்ததுபோலவும் பிறப்பு வேறுபாடுள்ள உடல்கள் பல இருப்பினும் அவற்றில் கூடிநிற்கும்பிரமம் ஒரு தன்மையாக இருக்கும் என்றாய். ஒளிமிகுந்திருக்கும் மணிகளும் நூலும் தாமாகக் கூடியதன்று. வேறொருவன் கோக்கக் கோப்புண்டு என்றதாம். அதுபோல உடலில் பிரமத்தைக் கூட்டியவன் ஒருவன் வேண்டும் அன்றியும் உன்னுடைய பிரமம்அறியாததாயும் உடல் அறிவுடையதாயும் இருப்பின், பாலும் பசுவும் உவமைகூறத்தகும். அன்னவல்லவே. அன்றியும் அவை நீருடைய கலங்கள் பலவாயினும் கதிரவன் ஒன்றுஎன்றும், வேவ்வேறுபெயர் பெற்றிருக்கும் நீர்நிலைகள் பலவாயினும் அவற்றிலுள்ள நீர் ஒருதன்மைத்து என்றும், கண்டு சொல்வதுபோலப்பிரமத்தையும் உடலையும் வேறாகக்கண்டுசொல்பவர் வேண்டுமே! அவ்வாறில்லாத பொழுது அவ்உவமையால் யாதுபயன்? கண்ணாடியில் நிழற்படுதல் போல உடம்பில் பிரமத்தின் எதிர்நிழல் படுமெனில், அவ்வாறு படும் எதிர்நிழலால் கண்ணாடி அசைவுறுதாயின் பிரமத்தின் எதிர் நிழலாலும் உடல் போக்குவரவு புரிதல் பொருந்தும்; அவ்வாறின்மையின் அவ்வுவமை பொருந்தாது.

காந்தம் வேறுபடுதலின்றி நிற்க, அதன்முன் இரும்பானது தொழிற்படுதல்போலப் பிரமத்தின்முன் உடல் போக்குவரவு புரியுமெனில், பிரமம் என்பது யாண்டும் நீக்கமறநிற்பது ஆதலின் அதன்

திருமுன்பில்லாத இடம் எதுவுமில்லை. ஆதலின் அறிவுடைய பொருு ளன்றி அறிவில் பொருள்களும் அதன் திருமுன்பு தொழிற்படுதல் வேண்டும். ஆனால் குடம் ஆடை முதலிய அறிவில் பொருள்கள் வறிதே கிடப்பனவன்றித் தொழிற்படுதல் இல்லை. அன்றியும் காந்தமும் இரும்பும் ஒருங்கு நிற்பினும் அவை தாமாகச் செயற்படுவதில்லை; நேராகக்காட்டவே செயற்படும். அதுபோலப் பிரமத்தையும் உட லையும் கூட்டிச்செயற்படுத்த வேறொரு முதல்வன் வேண்டும் என்பதா கும். அன்றியும் காந்தம் இரும்பைத் தன்பால் ஈர்த்துக்கொள்வதன்றி நீக்குமாற்றல் உடையதன்று. ஆனால்பிரமத்தின் திருமுன்போ உடல் கூடியும் பிரிந்தும் செயற்படுவதால் அவ்வுவமை பொருத்தமின்றாம்.

கனவில் பெருந்துயருற்றவன் விழித்தபோது அத்துயரத்தைப் பொய்யாகக் கண்டதுபோலவும், இரவில் புற்றின் அருகே கிடந்த கயிறு பாம்பெனத்தோன்றி விடிந்துழி அதுபொய்யானது போலவும் இன்பதுன்பங்கள் பிரமத்திற்குத் தோற்றமாவனவன்றி உண்மையில் இல்லை என்று கூறுகிறாய். உயிர் கனவில்நுண்ணுடம்போடும், நனவில் பருவுடம்போடும் துய்க்கு மின்ப துன்புங்களெல்லாம் வினையின் பய னன்றி அவைபொய்யல்ல. அன்றியும் இரவில் கண்டபுற்றும் அதன் வாயிலில் கிடந்த கயிறும், இவனுடைய உடலும் அறிவற்றவை. அறிவாய் உள்ள பிரமம் கயிற்றைக் கயிறென்று கருதாமல் மயங்குதற்குக் காரணமென்னை? கண்டகயிற்றைப் பாம்பெனக்கருதி அச்சப்படுமாயின், அதனை முதல்வன் எனத்தகுமா? மேலும் கனவில் கண்டதீங்கு பொய்யென்றும், கங்குலில் கண்டகயிறு பொய்யென்றும் ஒருமுறை அறிந்த பின்னும் கனவிலும் கங்குலிலும் மீண்டும் அவற்றைக் கண்டுவருந்துவது பிரமத்திற்குத் தகுமா? தகுமேல், அதுபிரமம் ஆகுமா? உன்னுக.

சிவந்தபூவொடு கூடியிருக்கும் வெண்ணிறக்கல் செந்நிறம் காட்டினும் தன் தன்மை இழவாது. அது போலப் பிரமம் இன்ப துன்பங்களைத் துய்ப்பினும் தன் தன்மை மாறாதிருக்குமெனில், வெண் ணிறக்கல் சிவந்த பூவொடு சேர்ந்தபோது அச்சிவப்பு வண்ணம் ஒன்றுமேகாட்டும். ஆனால் பிரமமோ வினைப்பயன் நுகருங்கால் பல் வேறு வகையதாய் இருக்கும். அதற்குக்காரணமென்ன? அறப் பயனும் மறப்பயனும் பலவாதலின் அவற்றைத் துய்க்கும் பிரமமும் பல்வேறு நிலையவாய் இருந்தது எனில், அதனை அடிமையாகக் கொண்டு ஆள்வதோரு அறிவு உண்டென்றும், அறியாமை யொடு கூடிஇருக்கும் ஓர் உடல் உண்டென்றும், பல்வேறு வகை யவாய்த் துய்க்க நேரும் அறம் பாவங்கள் உளவென்றும் கொள்ள

நேரும்; களவுகொண்ட கள்வரைக் கொண்டு வந்து சிறைசெய்து அதற்குத் தக ஒறுக்கும் அரசனின் ஆணைபோல், பழவினைப்பயனால் உண்டாகிய உடலெனும் சிறையில் உன்னுடைய பிரமத்தை விட்டு அறம்பாவங்களால் துய்ப்பிக்கும் முதல்வனொருவனும் உளனாதல் வேண்டும்.

வினைவயப்பட்ட உடலில் மூவகைப்பாடு [அவத்தை] பெறும் என்றாய். அவற்றைத் துய்ப்பது யார்? பிரமம் எனில் அது எங்கும் நிறைந்தது. ஆதலின் அது உடலில் கட்டுண்டு நனவு, கனவு, உறக்கம் எனும் மூன்றுபாடுகளைப் பெறுதற்குக் காரணமில்லை, உடலெனின் அது அறிவற்றதாதலின் அது துன்புறும் என்றற்-கில்லை. பின்னைப்பாடுபெறுவது யாது? அகக்கருவிகள் பிரிந்த இடத்து உண்டாகிய மயக்கமே அப்பாடு எனில், உடம்பில் முதன்மை பெற்றிருப்பது அவ்வகக்கருவிகளா? அன்றிப் பிரமமா? பிரமமே முதன்மையுடைத்தாயின் அப்பிரமம் நிற்க அவ்வகக்கருவிகள் நீங்க மாட்டா. அன்றி அவ்வகக்கருவிகளே முதன்மை உடையவாயின் எல்லா முதன்மையுமுடையது பிரமம் என மறை கூறும்சொல் பழுதாதல் வேண்டும்.

இவ்வாறின்றிப் பாடு பெறுவது உடற்குள் நிற்கும் பிரமமே எனில், பலகணிவாயிலின் புறம்பேநின்று உள்ளே ஒரு விரலை நீட்ட அவ்விரல் நுனியில் ஒரு வண்டானது கொட்ட அதனாலுண்டாகிய துன்பத்தை அவ்விரல் தானே துய்த்தாயின் இவ்வுடலில் பொருந்தி நின்ற பிரமம் அவ்வவத்தைப்பாட்டினைத் தனியே துய்க்கும் எனலாம். மாறாக விரல்நுனியில் கொட்டிய கடுப்பு அடி முதல் முடியளவும் நின்று கடுப்பதால் உடலில் பொருந்தியிருக்கும் பிரமம் அவ்வவத்தையைத் தனியே பொருந்தும் என்றல் சாலாது.

கண்ணாடியில் தோன்றும் எதிர் நிழலினது கண்ணில் ஒரு குச்சியைக் கொண்டு குத்தின் கண்ணாடி உடைவதன்றி அந்நிழற்குக் கேடுவருவதன்று. அது போல இன்பதுன்பங்களால் உண்டாய நேர்வுகளும் உடற்கன்றிப் பிரமத்திற்கு இல்லையெனில், இன்ப துன்பங்களைத் துய்ப்பது பிரமம் எனக் கூறிய நின்மெய்நூல் கூற்றுக்கு மாறாகும் அன்றியும் அறிவே இன்பதுன்பங்களைத் துய்ப்பது ஆதலின் மாறாக உடற்கு என்றல் காண்டல் மாறுபாடும் ஆகும். அன்றியும் 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்னும் திருக்குறளைப் புதுக்கினாய் ஆதல் வேண்டும். அன்றியும் யாண்டும் நீக்கமற நிறைந்த பிரமம் உடலில் கட்டுண்டு வினைப்பயன்களைத் துய்க்கும் என்பாயாயின், விண்ணில் பரந்து இயங்கும் காற்றினைப் பிடித்து அதனைச் சிறைசெய்தவன் ஆவை என்று கூறப்படும்.

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

❋ ஸ்ரீகுமரகுருபரர் இதழ் பிரதி ஆங்கில மாதமும் 10 ஆம் தேதி சந்தாதாரர்களுக்கு அனுப்பப் பெறுகிறது. முகவரிகளைச் சரி பார்ப்பதில் மிக்க கவனம் செலுத்தப் படுகிறது. அஞ்சல் செய்த பிரதிகட்குச் சான்று பெறப் படுகிறது; எனவே இதழ் வரவில்லை என்ற புகார்க் கடிதங்கட்குப் பதிலெழுதுவது சாத்தியமாகாது. இதழ் வர வில்லை என்றால் உள்ளூர் அஞ்சலகத்திலேயே புகார் செய்யலாம்.

❋ ஆண்டுச் சந்தா ரூ 7-50 மட்டுமே; அதற்கும் குறைவாக வரும் தொகைகளுக்குப் பதிலெழுதவோ இரசீது அனுப்பவோ இயலாது. அவரவர்களாகவே எஞ்சிய தொகை அனுப்ப வேண்டும். கடிதட்போக்குவரத்துக்குத் தேவையான அளவு உயர்ந்தபட்ச சந்தாத் தொகையில் இதழ் நடத்தப் பெறவில்லை என்பது யாவரும் அறிந்ததே.

❋ கடிதத் தொடர்புகளுக்கு உரிய அஞ்சல் தலைகள் இணைக்கப்பெறவேண்டும். நிர்வாக ஆசிரியர், ஸ்ரீகுமரகுருபரர், ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் 612 504 என்ற முகவரிக்கு மட்டுமே எழுதப் பெறவேண்டும். பெயருக்கு எழுதுதல் கூடாது.

❋ முகவரி மாற்றங்களை உடனுக்குடன் தெரிவித்துதவ வேண்டுகிறேன்.

நி. ஆ-ர்.

# திருவிளையாடற் புராணம்

உரைநடை

வேதப்பரிவீரர் வழுதிக்குக் குதிரைகளின் நாடுகளைக் கூறல்

சோமசுந்தரக் கடவுளாகிய வீரர் பாண்டியனை நோக்கி. ''அரசே! இக்குதிரைகள் காம்போச நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் மந்தரமலையிலுள்ளவை; இக்குதிரைகள் காந்தார நாட்டிலுள்ளவை; இக் குதிரைகள் வான்மீக நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் சிந்து நாட்டி லுள்ளவை; இக்குதிரைகள் பாஞ்சால நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் துளுவ நாட்டிலுள்ளவை: இக்குதிரைகள் இமயத்திலுள்ளவை; இக் குதிரைகள் ஸ்ரீசைலத்திலுள்ளவை; இக்குதிரைகள் கலிங்க நாட்டில் உள்ளவை; இக்குதிரைகள் ஆரிய நாட்டிலுள்ளவை: இக்குதிரைகள் கூர்ச்சர நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் கேகய நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் யவன நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் மக்க நாட்டில் உள்ளவை; இக்குதிரைகள் பல்லவ நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் சவ்வீர நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் மகாராஷ்டிர நாட்டில் உள்ளவை; இக்குதிரைகள் வளையுச நாட்டிலுள்ளவை. இக்குதிரைகள் வாசந்திக நாட்டிலுள்ளவை: இக்குதிரைகள் காஸ்மீர நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் மாளவ நாட்டிலுள்ளவை இக்குதிரைகள் காந்தார நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் சௌராஷ்டிர நாட்டிலுள்ளவை; இக்குதிரைகள் சாலி நாட்டிலுள்ளவை; இக் குதிரைகள் தீவாந்தரங்களிலுள்ளவை; இக்குதிரைகள் குரு நாட்டில் உள்ளவை. இவ்வாறு பல்வேறு நாடுகளிலுள்ள குதிரைகளையெல்லாம் இவ்வாதவூரர் கொடுத்த பொருளின் விருப்பத்தாலே இவர்களெல் லோரும் கொண்டுவந்தனர்'' என்று ஒவ்வொன்றையும் சுட்டிக் காட்டியருளினார்.

இறைவன் குதிரைகளின் நிறங்களை எடுத்துக்கூறல்

அருமறைப் பரிமேலழகராய் வந்த பரமனார், மீண்டும் பாண்டியனை நோக்கி, ''அரசே! இக்குதிரைகளிலே வெள்ளி, முத்து, பால், சந்திரன், சங்கு, வெண்பனி ஆகிய இவற்றில் ஒன்றைப் போன்றது வெள்ளைக் குதிரையாம். மாதுளை மலர், செம்பஞ்சுக் குழம்பு ஆகிய இவற்றில் ஒன்றைப்போன்றது சிவப்புக்குதிரையாம். கரியமை, குயில், கருவண்டு, கருமுகில் ஆகிய இவற்றில் ஒன்றைப் போன்றது கருங்குதிரையாம்; எரிகின்ற நெருப்பு. கோரோசனை ஆகிய இவற்றில் ஒன்றைப் போன்றது பொன்மைக்குதிரையாம். வெண்மை, செம்மை, கருமை, பொன்மை என்ற நான்கு நிறங்களும் கலந்த குதிரை மிச்சிரம் எனப்

பெயர் பெறும்: முகம், மார்பு, உச்சி, வால், நான்கு கால்கள் என்னும் எட்டு உறுப்புகளிலும் வெண்மை கலந்த குதிரை 'அட்ட மங்கலம்' எனப்பெயர் பெறும். முகத்திலும் நான்கு கால்களிலும் வெள்ளை நிறமுள்ள குதிரை 'பஞ்சகல்யாணி' எனப் பெயர் பெறும்;

குதிரைகளின் சுழிகளையும் பயனையும் எடுத்துக் கூறல்

குதிரையின் கழுத்தில் வலஞ்சுழி இருந்தால் அதனைத் 'தெய்வமணி' என்று கூறுவர். முகம், தலை, மூக்கு, மார்பு ஆகிய இந்நான்கினும் இரண்டிரண்டு சுழிகளும், நெற்றி நடுவிலும் பின்பக்கத்திலும் ஒவ்வொரு சுழியும் இருப்பது நல்லிலக்கணம் வாய்ந்த குதிரையாகும்: இச்சுழிகளில்லாத குதிரை இலக்கணக் குற்றமுடையதாம் ஒன்றோடொன்று நெருங்காமல் பிரிந்து மார்பின்கண் ஐந்து சுழியுள்ள குதிரை சிரீவற்சம் என்ற பெயரினைப் பெறும். நெற்றியிலே இருசுழிகளேனும் முச்சுழிகளேனும் இருத்தல் நல்லது; ஒன்றோடொன்று தொடர்ந்து நான்கு சுழி வலம்புரியாக இருப்பதும் நல்லதாம்; முன்கால்களின் அடியில் இருசுழிகளிருப்பினும் நன்றாம்.

கழுத்து நடுவில் இரட்டைச் சுழியினையுடைய குதிரை தன் தலைவனுக்கு வறுமையினையும், துன்பத்தினையும், மரணத்தினையும் உண்டாக்கும். கணைக்கால்களில் இரட்டைச் சுழி இருந்தால் அச்சத்தையும் துன்பத்தையும், விலங்கு பூணுதலையும் உண்டாக்கும். மேலுதடு, முன் காலடி, கபாலம், முழந்தாள் இந்நான்கிலும் சுழிகள் இருந்தால் தலைவனைக்கொல்லும். இத்தகைய குற்றமுள்ள சுழிக்குதிரைகள் பந்தியில் (லாயத்தில்) வந்து இருக்கினும் தீங்கு விளையும்.

குதிரைகளுக்கு வயது முப்பத்திரண்டாம்; பருவம் பத்தாம்; ஒவ்வொரு பருவத்திற்கும் மூன்றாண்டும் இரண்டு மாதமும் பன்னிரண்டு நாளும் ஆகும்.

பிற பரிநூலார் கூறும் இல்க்கணம்

எந்த நிறத்தின் வகை மிகுந்திருந்தாலும் வெள்ளை நிறம் கலந்திருந்தால் அக்குதிரை நல்லது. கரிய குதிரைக்கு வயிற்றிலேனும் மார்பிலேனும் செந்நிறமிருந்தால் அச்குதிரை வெற்றியைப்படைப்பது அவ்விடங்களில் வெண்மையிருந்தால் அக்கரிய குதிரை வாருணம் எனப் பெயர்பெறும். அதுவும் தலைவனுக்கு வெற்றியினை அளிக்கும். பிடரி வெளுப்புள்ள குதிரை மகப்பேற்றினை அளிக்கும். மார்பில் வெண்மையுள்ள குதிரை மகிழ்ச்சியைத் தரும். கழுத்தில் வெண்மையுள்ள குதிரை மிக்க செல்வத்தைக் கொடுக்கும். முகத்தில் வெண்மை நிறமுள்ள குதிரை நல்ல வெற்றியை அளிக்கும். முகத்தில்

பின் பக்கம் வெண்மையமைந்த குதிரை இன்பத்தைக் கொடுக்கும். இடப்பக்கம் வெண்மையுள்ள குதிரை மகப்பேற்றை மிகுதியாகக் கொடுக்கும். வலப்பக்கம் வெண்மையுள்ள குதிரை செல்வத்தையும் பல விளைபொருள்களையும் நல்கும். முதுகு, வால், முகம் இம்மூன்றிலும் வெண்ணிறமுள்ள குதிரை வெற்றியைத்தரும். நாபியிலிருந்து முன்புறமெல்லாம் சூரியனைப்போல் செந்நிறமும் பின்புறம் முழுதும் சந்திரனைப்போல் வெண்ணிறமும் பெற்ற குதிரை பகற்போரிலே வெற்றியைத்தரும். முன்புறம் வெளுத்துப் பின்புறம் சிவந்த குதிரை இராப்போரிலே வெற்றியைத்தரும். இவ்விருவகைக் குதிரைகளும் இங்கு வந்துள்ளன.

உத்தமக் குதிரையின் இலக்கணம்

அடிவைத்தால் ஒத்த பந்துபோலவும், நிலையால் மலைபோலவும், கனைத்தால் சிங்கத்தைப்போலவும், வேகத்தால் காற்றைப்போலவும், மிதித்து நடிக்கும் கூத்தினால் கூத்தாடுவானைப்போலவும், நடையில் சிங்கத்தையும், யானையையும் போலவும், தன்மை பெற்றதும், கற்புடைப் பெண்டிர்போலக் கவிழ்ந்த முகத்தையும், கருங்குவளை மலர்போன்ற கண்களையும் கொண்டதும், கருமுகில் போன்ற நிறமும் கருநெய்தல் மலர்போன்ற மணமும் நிறைந்ததும், மலர், அகில், சந்தனம், மணிப்பூண் இவற்றால் அழகு செய்யின் மகிழ்வுடன் திகழ்வதுமாக இருப்பது உத்தமக் குதிரை எனப் பெரியோர் கூறுவர்.

இவ்வுத்தமக் குதிரைக்கு உயரம் நூறுவிரலளவாம்; மத்திமக் குதிரைக்கு உயரம் எண்பத்து நான்கு விரலளவாம்; அதமக் குதிரைக்கு உயரம் அறுபத்தொன்று விரலளவாம்'; என்று பெரியோர் கூறுவர். அழிவில்லாத புகழையுடைய மன்னரே! அரசர்கள் இக் குதிரைகளைப் பூசித்து வணங்கிக் கயிறுமாறுவர்'' என்று கூறியருளினர்.

கயிறுமாறுதல்

அதுகேட்ட பாண்டியன் அக்குதிரைகளுக்கு அழகிய கிண்கிணி மாலையும், சதங்கை மாலையும், சிலம்பையும் அணிவித்து, மலர் மாலையும் சந்தனமும் இட்டுத் தூபமும் தீபமுங் கொடுத்து வழிபட்டு வணங்கி எதிரே நிற்கக் குதிரை வீரராகிய கடவுள், திருவாலவாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளை நோக்கிக் கைகளைச் சிரமேற் குவித்து, ''மன்னன் வாழ்க'' என வாழ்த்தித்

தாம் ஏறிவந்த வேதமாகிய குதிரையைத் தவிர மற்றைய மாயக் குதிரைகள் எல்லாவற்றையும் சயிறுமாறி அவன் கையிற் கொடுத் தருளினார். உடனே பாண்டியன் பாகர்கள் கையிற்கொடுக்க, அவர்கள் அக்குதிரைகளைக் [1]காற்றையும் கடலையும் கொண்டு போவதுபோலக் கொண்டுபோய் அரண்மனையிலே உள்ள பந்தியிலே சேர்த்தார்கள்.

பாண்டியன் சன்மானத்தைக் குதிரை வீரர் ஏற்றல்

குதிரை வணிகராகிய இறைவருக்குப் பாண்டியன் வெண் பட்டாடை ஒன்றினைப் பரிசிலாகக் கொடுத்தனன். பாணபத்திரனுக்கு அடிமை என்றுகூறி அவன் பணியைச் செய்தவர் இப்பட்டாடையை வாங்குதற்கு நாணுவாரோ? சிறிதும் நாணமில்லாமல் வாதவூரரைக் காத்தற்பொருட்டுக் குதிரையினின்றும் இறங்கி அதனை ஏற்றுத் திரு முடியிலே இரண்டாவது கங்கை ஒன்றினைச் சூடியது போலச் சூடி நின்றார்.

அதுகண்ட குதிரைவீரர்களாகிய கணநாதர்கள் அனைவரும், ''இந்த ஆடையை நமது இறைவர் குதிரையினின்றும் இறங்கி எளியன்போல் நின்றேற்றுத் திருமுடிமேல் அணிவதேன்? அங்ஙனம் செய்யாதொழியில் இவர் திருக்கரத்திலேந்திய ஓட்டையும், திக் காடையையும், பாம்பணிகளையும் பாண்டியன் கவர்ந்து கொள்வானோ?' என்று ஒருவரோடு ஒருவர் தம்முள் வினவி வெகுண்டு பேசினார்கள்.

பாண்டியன் மற்றைய குதிரைவீரர்கட்கும் வெவ்வேறு நிற முடைய பட்டாடைகளைக் கொடுத்தான். அவற்றையெல்லாம் அவர்கள் பெற்றுக்கொண்ட பின்னர், அன்பிற் சிறந்து அருள் வடிவாய் வந்த சோமசுந்தரக் கடவுள் வேதமாகிய குதிரையோடு மறைந்தருளினார். நரிகளாகிய குதிரைகளில் வந்த கணநாதர்களாகிய குதிரைவீரர்களும் அவரோடு உடன் மறைந்தார்கள்.

பாண்டியன் முதலியோர் அவரவரிடம் செல்லல்

பாண்டியன் தனக்கு இருமைக்குத் துணையாகிய திருவாத வூரடிகளுக்கு அருமையாகிய வரிசைகளைச் செய்து அவரை அவரிடத்திற்குச்செல்ல விடையளித்து உச்சிப்பொழுதில் அங்கு

1. இங்கே, வேகத்தால் காற்றையும், பரப்பு, தோற்றம், ஒலி முதலியவற்றால் கடலையும் உவமையாகக் கொண்டுள்ளன.

நின்றும் புறப்பட்டுத் தன் அரண்மனையை அடைந்தான். மற்றைய அமைச்சர்களும், குதிரையைக்காண வந்த நகர மக்களும் தத்தம் மனை புகுந்தனர்.

குதிரைவீரராகிய [1]சோமசுந்தரக் கடவுள் திருக்கோயிலை அடைந்து தமது திருவிளையாடல் அனைத்தையும் மீனாட்சியம்மையாருக்கிக் கூறி வீற்றிருந்தருளினார்.

செய்யுள்—127

ஆகச் செய்யுள்—2925

## 60. பரி நரியாக்கி வையையழைத்த படலம்[2]

வாதவூரர் தம்மை அடைந்தார்க்கு முகமன் கூறி விடுத்தல்

பல மங்கல இயங்களின் பேரொலியும் சேனைகளின் ஆரவாரமும் ஓங்க, மகளிர் எதிர்கொண்டு அட்டமங்கலப் பொருளை ஏந்தப் பாண்டியன் நல்கிய வரிசையுடன் திருவாதவூரர் தம் திருமாளிகையிற் புகுந்தார். அப்போது சுற்றத்தாரும் அவையினரும் நண்பரும் வந்து உரிமையாலே வினவியதற்கெல்லாம் வாதவூரடிகள் அவரவர்க்கு இசைய இன்சொற்களால் முகமனையும் மகிழ்வையும் அளித்து அவரவர் இருக்கைக்குச் செல்ல விடுத்தார்.

வாதவூரடிகளின் மன விருப்பம்

பிறகு வாதவூரடிகள் ஒரு தனியிடத்திலே அமர்ந்து, "திருவால வாயில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் நாம் அன்று குறையிரந்து வேண்டிக்கொண்டவாறே குதிரை வாங்கும்படி நாம் கொண்டு சென்ற பொருளையெல்லாம் தம்முடைய அடியார்களும் தாமுங் கைக் கொண்டு எம்மையும் பணிகொண்டு பிறவித் துன்பத்தைப் போக்கி

---

1. சோமசுந்தரக் கடவுள் குதிரை வீரராக எழுந்தருளிய இடம் 'பரிவீரமங்கலம்' என்பர். இது ஆவுடையார் கோவிலுக்குத் தெற்கே சுமார் ஐந்து மைலில் உள்ளது. இப் பரிவீரமங்கலத்திற்கு அருகே உள்ள "எழுநூற்றுமங்கலம்" என்னும் ஊரில்தான் எழுநூறு நரிகளைக் குதிரைகளாகச் செய்த இடம் என்பர்.

2. பா—ம் : பரி நரியாக்கிய படலம்.

யருளினார்; அன்றியும் பாண்டியனுடைய மனத்திற்கு இசைய நல்ல குதிரைகளைச் செலுத்தி நமக்கு இனிக் கவலை இல்லையாம்படி செய்த ருளினார்; இனி உலகினை வெல்லும் வண்ணம் தம்முடைய சிவானந்த அனுபவத்தில் இடைவிடாதிருக்கும்படி நம்மைத் தவநெறியிற் செலுத்துதல் வேண்டும்'' என்ற பெருவிருப்பம் தலைக்கொள்ள, இம்மை மறுமை இன்பங்களில் ஆசை சிறிதும் இன்றிச் சோமசுந்தரக் கடவுளின் திருவடியைத் தமது மனத்திலே கொண்டிருந்தார்.

சூரியன் மறைவும் சந்திரன் தோற்றமும்

அப்போது, ''நாளைக்கு ஆலவாய் அண்ணல் வாதவூரடிகளை ஆண்டருளும்பொருட்டு மண்சுமந்தருளுவதைக் காண வேண்டும்'' என்ற ஆவலுடன் நரிகளாகிய குதிரைகளால் மேலெழுந்த புழுதியால் போர்க்கப்பட்ட உடலைக் கழுவிக் கொண்டு திரும்பி வருதற்கு எண்ணியவனைப்போலச் சூரியன் மேலைக் கடலில் மூழ்கினான்.

இறைவன் திருவிளையாடலால் போந்த குதிரைக் கூட்டத்தினால் எழுந்த செம்புழுதிகளாலே மாசுபடிந்த அண்டத்தினைத் தனது வெள்ளிய நிலவாகிய ஆடையினால் முற்றுந் துடைக்கத் தோன்றிய வனைப்போலச் சந்திரன் வந்து தோன்றினான். மேலும் விண்மீன் களையே எழுத்தாக எழுதிய வானமாகிய ஏட்டினை இருளாகிய மையினைத் தடவித் தூய வெள்ளிய நிலவாகிய வெள்ளாடையினால் துடைப்பதற்குச் சந்திரன் வந்து தோன்றியதுபோலவும் இருந்தது;

குதிரைகள் நரிகளாக மாறுதல்

பாண்டியன் அரண்மனையின்கண் புகுந்த குதிரைகள் அன்று நடு இரவு வந்ததும் சிவபெருமான் திருவிளையாடலினால் தமது உண்மை வடிவத்தை - நரி வடிவத்தை எடுத்துக் கொண்டன.

நரிகள் ஒன்றோடொன்று பேசிக்கொள்ளல்

அப்போது நரிகள் ஒன்றோடொன்று நோக்கி, ''சங்கொலியையும், பிணப்பறையொலியையும், மகளிர் அழுகுரல் ஒலியையும், அவர்கள் மார்பில் கையினால் அடித்துக்கொள்ளும் ஒலியையும் இனிய அமுதினைப் பருகுவது போல நாம் எவ்விடத்தும் செவிகள் குளிரப் பருகுவோம்! நாம் இன்று பகல் முழுதும் குதிரைகளாக, மக்களைச் சுமந்து கயிற்றாலும் சங்கிலியாலும் கட்டுப்பட்டுக் குதிரைச்

சவுக்கடியும் பட்டு வருந்தினேம்! இப்பொழுது நம்முடைய நல்வினை யின் வலிமையாலே நமது பழைய வடிவினைப் பெற்றுக்கொண்டோம்! நாம் காட்டின்கண் சஞ்சரிக்கத் தொடங்கிய நாள்முதல் நேற்று வரையும் இந்தக் கடுந் துன்பத்தை ஒருகாலத்தும் அறிந்திலோம்! கட்டிய சங்கிலித் தழும்பும் சவுக்கடித் தழும்பும் நம் உடலைவிட்டு இன்னும் நீங்கவில்லை! இன்றிரவு விடியுமுன் நாம் இவ்விடத் தினின்றும் ஓடிவிடுவதே செய்யத்தக்க காரியம்! வயிறு நிறைய நாம் தின்பதற்கு நத்தை, சங்கு, நண்டு முதலிய ஊன்கள் இங்கில்லை. இனிப் புதிதாகக் கடலை, கொள்ளு, பயறு, புல்லு முதலிய உணவு தின்னுதல் நமக்கு அடாது! அரசன் காவலாளரும் நகரிலுள்ளவரும் நம்மைக் காணின் அடித்துக் கொல்லுவர்! ஆதலால், இன்றிரவு விடியுமுன் சங்கிலிக் கட்டினை அறுத்துக்கொண்டு ஓடிப்போவதே தக்க உபாயம்'' என்று ஒருசேரப் பேசி முடிவு செய்து கொண்டன.

### நரிகள் படுத்திய பாடு

நரிக்கூட்டங்கள், கொள்ளையும், கடலையையும் வெறுத்து நத்தை, நண்டு முதலிய கொழுவிய ஊன்களை விரும்பிச் சங்கிலித் தொடக்கை முறித்துக் காலிற் கட்டிய கயிற்றுடன் முளையையும் பிடுங்கி ஊளை யிட்டுக்கொண்டு தப்பியோடும் வழியைப் பார்த்தன! சில, தாம் நின்ற குதிரைப்பந்தியிலே தம்முடன் பிணிக்கப்பட்டிருந்த குதிரைக் கூட்டங்களைத் தம் பற்களாலே தாவிக் கடித்து மென்று குருதியைக் குடித்தன! சில, கட்டிய முளையோடு பிடுங்கிக்கொண்டு ஓடுதலால் அவற்றின் அண்டங்களில் முளைகள் பட்டு ஊறுசெய்தன!

குதிரைப்பந்தி காக்கும் வீரர்கள் நரிகளின் ஊளையொலியைக் கேட்டு உறக்கம் நீங்கி விரைந்து எழுந்து, நேற்றுச் சிங்கம் போல் வந்த குதிரைகளெல்லாம் நரிகளாகி ஏனைய குதிரைக்கூட்டங்களின் குடர்களைப்பறித்து உண்ணுதலைக் கண்டனர். அங்ஙனம் கண்டவள விலே சில வலியுள்ள நரிகள், கூரிய இருப்பு முட்களைத் தலையிற் கொண்ட மதில்களைத் தாண்டியோடின! சில நரிகள், சாளர வழியே பாய்ந்தோடின! சில நரிகள், நுழைவாயில் வழியாகக் கூடி யோடின! சில நரிகள், கரந்துறை வழியால் புகுந்தோடின! முட மான நரிகளும், கிழ நரிகளும், குருட்டு நரிகளும், நோயுற்ற நரிகளும் ஓடும் வழிகளைக் காணுமையால் பந்தியிலேயே மனம் ஏங்கிக் கிடந்தன. வேறு சில நரிகள், தங்களை நெருங்கிவந்து வெருட்டு வோரைக் கீழே விழும்படி கடித்துவிட்டு அவர் கையில் அகப்படாமல் ஓடின! மற்றும் சில நரிகள், எதிரே வந்து தடுப்பவரின் கால்களின்

கீழே நுழைந்தோடின! சில நரிகள், செயலின்றிக் கிடந்து ஊளை யிட்டுக்கொண்டு வருந்தும் தங்கள் குட்டிகளை அணைத்தவாறு மதிலைத் தாவிக் குதித்தோடின!

இவ்வாறு பாண்டியனது மாளிகையைக் கடந்து வெளியேறிய நரிகளெல்லாம் பொய்கைகள், பூந்தோட்டங்கள், அறச்சாலைகள், வீதிகள், திருக்கோயில்கள், சந்தி வகைகள் முதலான பல இடங்களிலும் சென்றனவாய் நகரெங்கும் நிறைந்தன; மன்றங்கள், ஓவியக் கூடங்கள், செய்குன்றுகள், அம்பலங்கள், முன்றில்கள், சோலைகள் முதலிய இடங்களிலும் பரவி ஊளையிட்டுத் திரிந்தன.

யானைகளின் பிளிறொலியும், பல்வகை வாத்தியங்களின் ஒலியும், குதிரைகளின் கனைப்பொலியும், இனிய தமிழொலியும், பாணர்களின் இசைப் பாட்டொலியும் நிறைந்த அழகிய மதுரை மாநகர் முழுதும் நரிகளின் ஊளையொலி மிகுந்தெழுந்ததாலே நகரிலுள்ளோர் அனைவரும் விழித்துக்கொண்டனர். நாய்கள் விழித்தன; மயில்கள் விழித்தன; கோழிகள் விழித்தன; வண்டுகள் விழித்தன; அன்னப் பறவைகள் விழித்தன; நாரைக்கூட்டங்கள் விழித்தன; யானைகள் விழித்தன; காக்கைகள் விழித்தன. இவ்வாறு இருதிணை உயிர்களும் விழித்துக்கொண்டு நடுங்கிக் கிடந்தன!

சில நரிகள், பசிமிகுதியால் சமையல் அறையிற் புகுந்து அடுக்கிய மட்கலங்களை உருட்டிப் பலவகை உணவுகளையும் சோற்றையும் தின்று குட்டிகளுக்கும் கொடுத்து ஊளையிட்டன. சில நரிகள், புறா, நாகண வாய்ப் பறவை, கிளி, சேவல் முதலியவற்றைக் கவர்ந்து தின்றன. சில நரிகள், வீட்டில் தூங்கிய பிள்ளைகளைக் கொண்டுபோய் குமுத வாயில் புன்னகை தோன்ற நக்கி உறவுபோற் கருதி விளையாடின. ஆனால் ஊறு ஒன்றும் செய்யவில்லை. சிற்சில நரிகள், முன்றிலில் படர்ந்த பசுங்கொடிகளை வேரோடு பிடுங்கின; பலவகை இளங் காய்களைக் கடித்தன; கரும்புகளை முறித்து வாயிற்போட்டுக் குதட்டி ஊளையிட்டுக்கொண்டு விளையாடித் திரிந்தன; ஆயிரக்கணக்கான ஆட்டுக்கிடாய்களையும், பன்றிகளையும், கோழிகளையும் கோழிக் குஞ்சுகளையும் கொன்று திரிந்தன; நாய்கள் பின் தொடர்ந்து துரத்திக் குரைத்தால் அவற்றைத் திருப்பிச் சென்று துரத்திக் கடித்துக் கொன்றன; பெருந்தோள் வீரர்கள் சென்று துன்புறுத்தினால் பொறுக்காது சினந்து மேல் வீழ்ந்து இரத்தம் வடிய அவர்களைக் கடிப்பன.